# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2014.08.11 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு

**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் எடுத்துக்கூறுவதற்கும், அத்தகைய உரிமைகளையும் உரித்துடைமைகளையும் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புத் தொடர்பாகத் தோதான சர்வதேச மரபுகளுக்கும், நியமங்களுக்கும், மிகச் சிறந்த செயல்முறைகளுக்கும் பயன்கொடுப்பதற்கும் ; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபையைத் தாபிப்பதற்கும்; குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் முகாமைச் சபையொன்றையும் இலங்கைப் பொலிசுத் திணைக்களத்தின் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளிற்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவையும் அமைப்பதற்கும் ; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்கும்; குற்றச்செயல்களுக்கும் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியத்தைத் தாபிப்பதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 51.00** **தபாற் செலவு : ரூபா 30.00**

*குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும்
சாட்சிகளுக்குமான உதவி மற்றும்
பாதுகாப்பு*

*ச.வ.ஓ. 46 /2007*

**குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் எடுத்துக் கூறுவதற்கும், அத்தகைய உரிமைகளையும் உரித்துடைமைகளையும் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் ; குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புத் தொடர்பாகத் தோதான சர்வதேச மரபுகளுக்கும், நியமங்களுக்கும், மிகச் சிறந்த செயல் முறைகளுக்கும் பயன்கொடுப்பதற்கும் ; குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையைத் தாபிப்பதற்கும்; குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் முகாமைச் சபையொன்றையும் இலங்கைப் பொலிசுத் திணைக்களத்தின் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளிற்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவையும் அமைப்பதற்கும் ; குற்றச் செயல்களுக்கும் பலியாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு செலுத்துவதற்கும் ; குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியத்தைத் தாபிப்பதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1.*** *(1) இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*(2) இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் காலத்திற்குக் காலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் அல்லது*

தேதிகளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும். இச்சட்டத்தின் வெவ்வேறு பாகங்கள் நடைமுறைக்கு வருவதற்காக வெவ்வேறு தேதிகள் அமைச்சரால் நியமிக்கப்படலாம்.

## பாகம் I

### சட்டத்தின் குறிக்கோள்கள்

சட்டத்தின் குறிக்கோள்கள்.

**2**. இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் எடுத்துக்கூறலும், போற்றிக்காத்தலும் மற்றும் வலுவுறுத்துதலும், அத்தகைய உரிமைகளையும் உரித்துடைமைகளையும் மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் வலுவுறுத்துவதற்கும் மற்றும் பிரயோகிப்பதற்குமான அமைப்புமுறையொன்றை ஏற்பாடு செய்தலும் ;

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்குதல் ;

(இ) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர், அவர்களுக்கெதிராகத் தவறுகள் புரியப்பட்டமைக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களிடமிருந்து நட்டஈடு பெறுவதனை இயலச் செய்தல் ;

(ஈ) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கான மீட்டளிப்பு, நட்டஈடு, இழப்புக்கான எதிரீடு மற்றும் புனர்வாழ்வு என்பனவுட்பட, அத்தகைய பலியாக்கப்பட்டோரினால் நிவர்த்தி பெறப்படுவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(உ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமை

களையும் மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் முகமாக அரச, நீதிமுறை அலுவலர்களினதும் பகிரங்க அலுவலர்களினதும் கடமைகளையும் பொறுப்புடைமைகளையும் எடுத்துக்கூறுதல் ;

(ஊ) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் எதிராகப் புரியப்படக்கூடிய தவறுகளையும் மற்றும் அத்தகைய தவறுகளைப் புரிகின்ற ஆட்களின்மீது விதிக்கப்படக்கூடிய தண்டனை வலுவளித்தல்களையும் விதித்தல் ; அத்துடன்

(எ) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புத் தொடர்பாக மிகச் சிறந்த செயல்முறைகளைக் கடைப்பிடிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்தல்.

## பாகம் II

### குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளும் உரித்துடைமைகளும்

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோரின் உரிமைகள்.

**3.** *(1)* குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் பின்வருவனவற்றிற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) சமத்துவத்துடனும், நியாயமான முறையிலும் மற்றும் அவரது மதிப்புக்கும் அந்தரங்கத்தன்மைக்குமான மரியாதையுடனும் நடாத்தப்படுவதற்கும் ;

(ஆ) பலியாக்கப்பட்டவர் ஒரு பிள்ளையாகவிருக்குமிடத்து, அத்தகைய பிள்ளையின் மிகச் சிறந்த நலன்களை உறுதிப்படுத்தும் ஒரு முறையில் நடாத்தப்படுவதற்கும்;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான நடவடிக்கை முறைக்கிணங்க, குற்றச் செயலொன்றுக்குப் பலியாக்கப் பட்டவராக இருப்பதன் விளைவாக உறப்பட்ட ஏதேனும்

தீங்கு, சேதம் அல்லது இழப்பு என்பவற்றிற்காகவும் அவற்றின் பிரதிபயனாகவும், இழப்புக்கான எதிரீடு மற்றும் மீட்டளிப்பு என்பனவுட்பட, உடனடியான, தோதான மற்றும் நியாயமான நிவர்த்தியைப் பெறுவதற்கும் ;

(ஈ) அச்சுறுத்தல்கள், மிரட்டுதல்கள், பழிவாங்குதல்கள் அல்லது எதிர்த்தாக்குதல்கள் என்பனவுட்பட, நிகழக்கூடிய ஏதேனும் தீங்கிலிருந்து தோதான முறையில் பாதுகாக்கப்படுவதற்கும் ;

(உ) குற்றச்செயலொன்றுக்குப் பலியாக்கப்பட்டவரொருவராக உறப்பட்ட ஏதேனும் உளரீதியான அல்லது உடல் ரீதியான ஊறுபாடு, தீங்கு, பாதிப்பு அல்லது இயலாமை என்பவற்றுக்காக மருத்துவரீதியில் சிகிச்சையளிக்கப்படுவதற்கும் ;

(ஊ) இயைபான அதிகாரிகளினால் பின்வருவன பற்றி அறிவிக்கப்படுவதற்கும் :-

(i) சேதவீடுகளைப் பெறுவதற்காகக் கிடைக்கக்கூடிய குடியியல் பரிகாரங்களும் அவற்றுக்கு ஏற்புடையற்பாலனவான இயைபான காலவிதிப்புக் காலப்பகுதிகளும் உட்பட, அவரினால் உறப்பட்ட ஏதேனும் தீங்கை நிவர்த்தி செய்வதற்காகக் கிடைக்கக் கூடியனவாகவுள்ள சட்டப்படியான பரிகாரங்கள் ;

(ii) நடைபெற்றுக் கொண்டிருக்கும் எவையேனும் புலனாய்வுகளுக்குப் பங்கமின்றி, சார்த்தப்பட்ட தவறுதொடர்பாக நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் புலனாய்வொன்றிலான முன்னேற்றம் ;

(iii) சுருக்கமுறையற்ற விசாரணை, விளக்கம், மேன்முறையீடு மற்றும் மீளாய்விலான விண்ணப்பம் என்பனவுட்பட, தவறு தொடர்பான நீதிமுறை வழக்கு நடவடிக்கைகளைக் கேட்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிகளும் அவற்றிலான முன்னேற்றமும் அவற்றைக் கேட்டுத் தீர்மானித்தலும் மற்றும் அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் பற்றிய அவரது உரிமைகளும் உரித்துடைமைகளும்;

(iv) சந்தேக நபரைப் பிணையில் விடுதல் மற்றும் விடுவித்தல், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல், குற்றஞ்சாட்டப்பட்டவருக்குக் குற்றத்தீர்ப்பளித்தல், தண்டனைத் தீர்ப்பளித்தல் அல்லது அவரை விடுதலை செய்தல் மற்றும் தவறொன்றைப் புரிந்துள்ளவரும் அல்லது புரிந்துள்ளவரெனச் சார்த்தப்பட்டவரும், குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு எதிராகத் தீங்கு அல்லது இன்னல் விளைவித்துள்ளவருமான குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவரை மறியற்சாலையிலிருந்து விட்டுவிடுதல் மற்றும் அதற்கான காரணங்கள் ; அத்துடன்

(v) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் தீங்குக்குச் சிகிச்சையளிப்பதற்கும் மற்றும் அவரை நலப்படுத்துவதற்கும் கிடைக்கக் கூடியனவாகவுள்ள மருத்துவ, சமூக சேவைகளும் வேறேதேனும் உதவியும் ;

(எ) தவறொன்று புரியப்பட்டமை பற்றிய முறைப்பாடொன்றை ஒன்றில் வாய்மொழி மூலமாக அல்லது எழுத்தில் முன்வைப்பதற்கும், ஏதேனும் பொலிசு

நிலையத்திலுள்ள அல்லது பொலிசுத் திணைக்களத்தின் வேறு கூறில் அல்லது பிரிவிலுள்ள ஒரு பொலிசு அலுவலரினால் அத்தகைய முறைப்பாட்டைப் பதிந்து கொள்வதற்கும், இயைபான புலனாய்வு செய்யும் அதிகாரியினால் அத்தகைய முறைப்பாட்டைப் பாரபட்சமின்றியும் எல்லாவற்றையும் உள்ளடக்கிய முறையிலும் புலனாய்வு செய்விப்பதற்குமான உரிமையைக் கொண்டிருப்பதற்கும் ;

(ஏ) நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏதேனும் புலனாய்வுக்குப் பங்கமின்றி, அத்தகைய பலியாக்கப்பட்டவருக்கு எதிராகப் புரியப்பட்டதெனச் சார்த்தப்பட்ட தவறு பற்றிய குற்றவியல் மற்றும் சட்டமருத்துவப் புலனாய்வுகளும் நீதிவானினான விசாரணைகளும் உட்பட, புலனாய்வொன்றின்போது சட்டவழக்குரைஞரினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கும், அத்தகைய புலனாய்வுகளை நடாத்துகின்ற தோதான தகுதிவாய்ந்த அதிகாரிகளுக்கு அவசியமான முறையீடுகளைச் செய்வதற்கும் ;

(ஐ) நடைபெற்றுக்கொண்டிருக்கும் அல்லது முடிவுற்ற ஏதேனும் புலனாய்வுக்குப் பங்கமின்றி, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 115, 116 மற்றும் 120 ஆம் பிரிவுகளால் தேவைப்படுத்தப்பட்டவாறாக, இறப்புக்கான காரணப் படிவங்கள், பிரேத பரிசோதனை அறிக்கைகள், மருத்துவ. - சட்ட அறிக்கைகள், கைவிரலடையாளப் பதிவாளரின் அறிக்கைகள், அரசாங்கப் பகுப்பாய்வாளரின் அறிக்கைகள் மற்றும் நிபுணரொருவரின் வேறேதேனும் அறிக்கை அத்துடன் பொலிசாரின் நீதிவான் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட அறிக்கைகள் என்பவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெறுவதற்கும் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெறும் நோக்கத்துக்காக

விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, அத்தகைய விண்ணப்பம் எந்த நீதிவானுக்குச் செய்யப்படுகின்றதோ அந்த நீதிவான், அத்தகைய அறிக்கையை வழங்குதலானது, அத்தகைய அறிக்கைகள் தொடர்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் புலனாய்வுகளைப் பங்கப்படுத்துவதாகவிருக்குமாவென்பதைப் பொலிசாரிடம் விசாரித்தல் வேண்டுமென்பதுடன், அறிக்கைகளுள் ஒன்றை அல்லது அதற்கதிகமானவற்றை வெளிவிடுதல், நடைபெற்றுக் கொண்டிருக்கும் புலனாய்வைப் பங்கப்படுத்தும் சாத்தியங்கொண்டதாகவிருக்குமிடத்து, நீதிவான், விடயத்துக்கேற்ப, அத்தகைய அறிக்கையின் அல்லது அறிக்கைகளின் வழங்குகையை மறுத்தலும் வேண்டும் ;

(ஒ) சுருக்கமுறையற்ற விசாரணை, விளக்கம், மேன்முறையீடு என்பவற்றில் உட்பட, அத்தகைய பலியாக்கப்பட்டவருக்கு எதிராகப் புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட தவறுபற்றிய புலனாய்வுக்கு முன்னரும், புலனாய்வின்போதும், புலனாய்வுக்குப் பின்னரும் மற்றும் நீதிமுறை வழக்கு நடவடிக்கைகள் நடாத்துவதற்கு முன்னரும், நடாத்தும் போதும், சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு எழுத்திலான தொடர்புகளை முன்வைப்பதற்கும் அல்லது சட்டவழக்குரைஞர் மூலம் முறையீடுகளைச் செய்வதற்கும் ;

(ஓ) அத்தகைய குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு எதிராகப் புரியப்பட்ட தவறுபற்றிய புலனாய்வை நடாத்துகின்ற புலனாய்வு செய்பவரொருவருக்கு அல்லது ஒரு கீழ்நிலை அலுவலருக்கு எழுத்திலான தொடர்புகளை முன்வைப்பதற்கும் அல்லது சட்டவழக்குரைஞர் மூலம் முறையீடுகளை செய்வதற்கும் மற்றும் செய்யப்பட்ட அத்தகைய தொடர்புகள் அல்லது முறையீடுகள் தொடர்பாகப் பதில் ஒன்றைப் பெறுவதற்கும் உரித்துடையவராகவிருப்பதற்கும் ;

(ஔ) சுருக்க முறையற்ற விசாரணை, விளக்கம், மேன்முறையீடுகள் மற்றும் மீளாய்விலான ஏதேனும் விண்ணப்பம் என்பவற்றில் உட்பட, தவறுதொடர்பான எல்லா நீதிமுறை அல்லது நீதி மருவிய வழக்கு நடவடிக்கைகளிலும், அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் வேறு சான்றை அவர் கேட்டால் அவரது சான்று முக்கியமான வகையில் பாதிக்கப்படுமென அல்லது அத்தகைய வழக்கு நடவடிக்கைகளின் குறித்தசில பாகங்கள் கேட்கப்படும்போது அத்தகைய பலியாக்கப்பட்டவர் சமுகமாகவிருப்பதனைத் தவிர்ப்பதன் மூலம் மட்டுமே நீதியின் முறையான நிறைவேற்றுகையைப் பெறமுடியுமெனப் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது வேறு நியாயசபை தீர்மானித்தாலொழிய, சமுகமாகவிருப்பதற்கும் ;

(க) அவருக்கெதிராகப் புரியப்பட்ட தவறுபற்றிய நீதிமுறை அல்லது நீதி மருவிய வழக்குநடவடிக்கைகளுக்கு வருகைதந்து அவற்றில் பங்குபற்றுவதற்குத் தேவைப்பட்ட ஏதேனும் உதவியையும் தகவலையும் பெறுவதற்கும்;

(ங) குற்றவழக்குத்தொடுப்பதற்குப் பங்கமின்றி, சுருக்க முறையற்ற விசாரணை, விளக்கம், மேன்முறையீடு மற்றும் மீளாய்விலான விண்ணப்பம் என்பவற்றில் உட்பட, தவறு தொடர்பான குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் பல்வேறு கட்டங்களில் சட்ட வழக்குரைஞரினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கும், வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, கிடைக்கப்பாலதாகவிருக்கின்றவிடத்து அத்தகைய நோக்கத்துக்காகச் சட்ட உதவி வழங்கப்படுவதற்கும் ;

(ச) தவறாளருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதனையடுத்தும் மற்றும் தண்டனைத் தீர்ப்பைத் தீர்மானிப்பதற்கு முன்னரும், ஒன்றில் நேரடியாகவோ அல்லது சட்ட வழக்குரைஞர் மூலமாகவோ, சம்பந்தப்பட்ட தவறு அவரது உடலை, மனநிலையை, தொழிலை, உயர்தொழிலை அல்லது தான்புரிதொழிலை, வருமானத்தை, வாழ்க்கைத் தரத்தை, ஆதனத்தை

மற்றும் அவரது வாழ்க்கை சம்பந்தமான வேறெவையேனும் அம்சங்களை உட்படுத்தி, அவரது வாழ்க்கையை எம்முறையில் தாக்கியிருந்ததென நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கும் ;

(ஞ) தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவரினால் மேன்முறையீடு அல்லது மீளாய்விலான விண்ணப்பம் ஒன்று, ஒன்றில் நேரடியாகவோ அல்லது சட்டவழக்குரைஞர்மூலமாகவோ முன்வைக்கப்படும் பட்சத்தில், அத்தகைய மேன்முறையீட்டின்மீது அல்லது மீளாய்விலான விண்ணப்பத்தின் மீது நீதித்தீர்ப்பளிக்கும் நீதிமன்றத்துக்கு, சம்பந்தப்பட்ட தவறு அவரது உடலை, மனநிலையை, தொழிலை, உயர்தொழிலை அல்லது தான்புரிதொழிலை, வருமானத்தை, வாழ்க்கைத் தரத்தை, ஆதனத்தை மற்றும் அவரது வாழ்க்கை சம்பந்தமான வேறெவையேனும் அம்சங்களை உட்படுத்தி, அவரது வாழ்க்கையை எம்முறையில் தாக்கியிருந்ததெனச் சமர்ப்பிப்பதற்கும் ; அத்துடன்

(ட) தவறொன்றைப் புரிந்துள்ளாரெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு மன்னிப்பளிப்பதனை அல்லது விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பைக் குறைப்பதனை அதிகாரத்திலுள்ள எவரேனும் ஆள் கவனத்திற் கொள்ளும் பட்சத்தில், அதுபற்றிய அறிவித்தலைப் பெறுவதற்கும் அத்தகைய மன்னிப்பை அல்லது குறைப்பை அளிக்கும் ஆளுக்கு, சம்பந்தப்பட்ட தவறு அவரது உடலை, மனநிலையை, தொழிலை, உயர்தொழிலை அல்லது தான்புரிதொழிலை, வருமானத்தை, வாழ்க்கைத் தரத்தை, ஆதனத்தை மற்றும் அவரது வாழ்க்கை சம்பந்தமான வேறெவையேனும் அம்சங்களை உட்படுத்தி, அவரது வாழ்க்கையை எம்முறையில் தாக்கியிருந்ததென அதிகாரசபையின் மூலம் சமர்ப்பிப்பதற்கும்.

**4.** (1) குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், அதிகாரசபையிடமிருந்து புரியப்பட்ட தவறின் விளைவாகவும், தவறொன்றின் சார்த்தப்பட்ட புரிகை பற்றியதாய் அல்லது அடிப்படை உரிமையொன்றின் சார்த்தப்பட்ட மீறுகை பற்றியதாய் அல்லது ஒரு மனித உரிமைமீறல் பற்றியதாய் அத்தகைய நீதிமன்றத்துக்கு முன்னரான அல்லது ஆணைக்குழுவுக்கு முன்னரான எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் அவர் பங்குபற்றியமையின் விளைவாகவும் உறப்பட்ட செலவுகளின் பிரதிபயனாகப் பணத்தொகையொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

குற்றச் செயலுக்குப் பலியாக்கப் பட்ட ஒருவரின் உரித்துடைமைகள்.

(2) அவசியமான மூலவளங்கள் அரசிடம் கிடைக்கக்கூடியனவாக இருக்குமிடத்து, குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர், குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவரொருவராக இருப்பதன் விளைவாக ஏற்பட்ட உடல்ரீதியான அல்லது உளரீதியிலான ஊறுபாடு, தீங்கு, பாதிப்பு அல்லது இயலாமை தொடர்பில், தோதான மருத்துவச் சேவைகள், மருந்துகள் மற்றும் வேறு மருத்துவ வசதிகள் உட்பட, தேவைப்பட்ட ஏதேனும் மருத்துவச் சிகிச்சையையும் அவசியமான புனர்வாழ்வு மற்றும் ஆலோசனைச் சேவைகளுக்காகவும் அரசிடம் உரிமைகோரவும் அரசிடமிருந்து அவற்றைப் பெறவும் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) அவசியமான மூலவளங்கள் இல்லாமை காரணமாக அல்லது போதாமை காரணமாக (2) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவரொருவரினால் உரிமைகோரப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு அரசு இயலாததாகவுள்ளவிடத்து, அத்தகைய பலியாக்கப்பட்டவர், குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவராக இருப்பதன்விளைவாக ஏற்பட்ட ஏதேனும் உடல்ரீதியிலான அல்லது உளரீதியிலான தீங்கு, ஊறுபாடு அல்லது பாதிப்பு என்பவற்றுக்காகத் தேவைப்பட்ட மருத்துவச் சிகிச்சையைப் பெறும் நோக்கத்துக்காகவும் அவசியமான எவையேனும் புனர்வாழ்வு மற்றும் ஆலோசனைச் சேவைகளுக்காகவும் அதிகாரசபைக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

சாட்சிகளின் உரித்துடைமைகள்.

**5.** (1) சாட்சியொருவர், அவரது மதிப்புக்கும் அந்தரங்கத் தன்மைக்கும் உரிய கவனஞ்செலுத்தி, புலனாய்வுசார், நீதி மருவிய மற்றும் நீதிமுறை அதிகாரிகளிடமிருந்து நியாயமான மற்றும் மரியாதையுடனான நடாத்துகையைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) சாட்சியொருவர், பின்வருவன காரணமாக அல்லது அவற்றின் விளைவாக, பின்வருவனவற்றின் போது அல்லது பின்வருவனவற்றின் பின்னர் தொல்லைக்குட்படுத்தப்படுதலாகாது அல்லது மிரட்டப்படுதலாகாது, வலுக்கட்டாயப் படுதலாகாது அல்லது முரணாக நடாத்தப்படுதலாகாது :-

(அ) தவறொன்று புரியப்பட்டமை அல்லது ஏதேனும் அடிப்படை உரிமையின் மீறுகை அல்லது ஏதேனும் மனித உரிமை மீறல் தொடர்பான தகவலை வழங்குதல்;

(ஆ) ஏதேனும் தவறுபற்றிய புலனாய்வின்போது அல்லது ஏதேனும் அடிப்படை உரிமையின் மீறுகை பற்றிய அல்லது ஏதேனும் மனித உரிமைமீறல் பற்றியவொரு புலனாய்வின்போது அல்லது விசாரணையின்போது ஒரு கூற்றை அளிப்பதற்குத் தன்னிச்சையாக முன்வருதல் ; அல்லது

(இ) தவறொன்றின் சார்த்தப்பட்ட புரிகை தொடர்பாக அல்லது அடிப்படை உரிமையொன்றின் சார்த்தப்பட்ட மீறுகை அல்லது மனித உரிமையொன்றின் சார்த்தப்பட்ட மீறல் தொடர்பாக ஒரு நீதிமன்றத்தில் அல்லது ஆணைக்குழுவொன்றின் முன்னர் சாட்சியம் அளித்தல்.

(3) சாட்சியொருவர் எவரேனுமாளினால் தவறொன்று புரியப்பட்டமை பற்றி அல்லது அடிப்படை உரிமையொன்றின் மீறுகைக்காக அல்லது மனித உரிமையொன்றின் மீறலுக்காக எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்குத் தகவல் வழங்கியுள்ளதன் விளைவாக அல்லது முறைப்பாடொன்றைச் செய்துள்ளதன் விளைவாக அல்லது கூற்றொன்றை அளித்

துள்ளதன் விளைவாக அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஓர் ஆணைக்குழுவுக்கு முன்னர் ஏதேனும் சாட்சியத்தை வழங்கியதன் விளைவாக அல்லது சட்ட வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்ததன் விளைவாக, அத்தகைய சாட்சி ஏதேனும் உண்மையான அல்லது நிகழக்கூடிய தீங்கு, அச்சுறுத்தல், மிரட்டுதல், பழிவாங்குதல் அல்லது எதிர்த்தாக்குதல் என்பவற்றுக்கெதிரான பாதுகாப்புக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

குறித்தசில சூழ்நிலைகளில் ஆட்கள் பாதுகாப்புக்கு உரித்துடையோராக விருத்தல்.

**6**. பலியாக்கப்பட்டவொருவராகவோ அல்லது சாட்சியொருவராகவோ இல்லாமல் இருக்கக்கூடியவரான ஆளொருவர், அத்தகைய ஆளின் தொழிலிடத்தில் அல்லது அத்தகைய ஆளின் தொழிற் சூழலில் தவறொன்று புரியப்பட்டமை பற்றி அல்லது ஏதேனும் அடிப்படை உரிமையின் மீறுகை பற்றி அல்லது ஒரு மனித உரிமையின் மீறல் பற்றி, எவரேனும் சட்டவலுவுறுத்தல் அதிகாரிக்கு அல்லது ஏதேனும் நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு அத்தகைய ஆள் தகவல் வழங்கியமையின், ஒரு முறைப்பாட்டைச் செய்தமையின் அல்லது ஒரு கூற்றை அளித்தமையின் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஓர் ஆணைக்குழுவின் முன்னர் சாட்சியம் அளித்தமையின் காரணமாக அல்லது அதன் விளைவாக பின்வருவனவற்றுக்கெதிரான பாதுகாப்பைக் கோருவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் :-

(அ) உளரீதியான, உடல்ரீதியான அல்லது நற்பெயர் ரீதியிலான இழப்பிலிருந்தான அல்லது சேதத்திலிருந்தான ஏதேனும் தொல்லை, மிரட்டுகை, வலுக்கட்டாயம், முரணான நடாத்துகை அல்லது இன்னல் ; அல்லது

(ஆ) அவரது தொழில் நிபந்தனையிலான ஏதேனும் பாதகமான மாற்றம்.

*உரிமைகளுக்கும் உரித்துடைமைகளுக்கும் மதிப்பு முதலியன கொடுப்பதற்குப் பகிரங்க மற்றும் நீதிமுறை அலுவலர்களுக்குள்ள கடமை.*

**7**. இச்சட்டத்தின் *3* ஆம், *4* ஆம், 5 ஆம் மற்றும் *6* ஆம் பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைகளையும் உரித்துடைமைகளையும் ஏற்றங்கீகரித்தல், அவற்றுக்கு மதிப்புக்கொடுத்தல், பயன்கொடுத்தல், அவற்றைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல் என்பன, ஆயுதந்தாங்கிய படையுறுப்பினர்கள் மற்றும் பொலிசு அலுவலர்கள் அத்துடன் ஒவ்வொரு நீதிமுறை அலுவலர் உட்பட, ஒவ்வொரு பகிரங்க அலுவலரினதும் கடமையாதல் வேண்டும்.

## பாகம் III

## குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் எதிரான தவறுகள்

*குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் எதிரான தவறுகள்.*

**8**. *(1)* *(அ)* குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரொருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு அச்சம் விளைவிக்கும் உட்கருத்துடன் அல்லது அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை ஒரு சட்ட வலுவுறுத்தல் அதிகாரியிடம் அத்தகைய ஆளுக்கெதிராக முறைப்பாடொன்றைச் செய்யாது தவிர்ப்பதனை அல்லது எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமளிக்காது தவிர்ப்பதனைச் செய்விப்பதற்கு அல்லது அத்தகைய ஆளுக்கெதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை அல்லது தொடுக்கப்பட்ட சட்டநடவடிக்கையை மீளப்பெறும்படி அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரை வலுக்கட்டாயப்படுத்துவதற்கு, அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை, அவரது உடலுக்கு, புகழுக்கு அல்லது ஆதனத்திற்கு

அல்லது அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி எந்த வேறெவரேனும் ஆளில் அக்கறைகொண்டுள்ளாரோ அந்த வேறெவரேனும் ஆளின் உடலுக்கு, புகழுக்கு அல்லது ஆதனத்திற்கு ஊறுபாடு ஏற்படுத்தப்போவதாக அச்சுறுத்துகின்ற ; அல்லது

(ஆ) குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரொருவரை அல்லது சாட்சியை ஒரு சட்டவலுவுறுத்தல் அதிகாரியிடம் அத்தகைய ஆளுக்கெதிராக முறைப்பாடொன்றைச் செய்யாது தவிர்ப்பதனை அல்லது எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமளிக்காது தவிர்ப்பதனைச் செய்விக்கும் உட்கருத்துடன் அல்லது அத்தகைய ஆளுக்கெதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை அல்லது தொடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையை மீளப்பெறும்படி அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரை வலுக்கட்டாயப்படுத்துவதற்கு அல்லது அத்தகைய ஆளுக்கெதிராக ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் அல்லது ஓர் ஆணைக்குழுவின் முன்னர் அத்தகைய குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவரினால் அல்லது சாட்சியினால் அளிக்கப்பட்டவொரு கூற்றுக்கான அல்லது வழங்கப்பட்ட சாட்சியத்துக்கான எதிர்த்தாக்குதலாக, அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்குத் தன்னிச்சையாக ஊறுவிளைவிக்கின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், மேல் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் இருபதாயிரம் ரூபாவிலான குற்றப்பணத்துக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

(2) குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரொருவரை அல்லது சாட்சியொருவரை எவரேனும் ஆளுக்கெதிராகச் சட்டவலுவுறுத்தல் அதிகாரியிடம் முறைப்பாடொன்றைச் செய்யாது தடுக்கும் அல்லது அத்தகைய ஆளுக்கெதிராக எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமளிக்காது தடுக்கும் அல்லது அத்தகைய ஆளுக்கெதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடொன்றை அல்லது தொடுக்கப்பட்ட சட்டநடவடிக்கையை மீளப்பெறும்படி அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை வலுக்கட்டாயப் படுத்தும் உட்கருத்துடன் அல்லது அத்தகைய ஆளுக்கெதிராகச் சட்ட நீதிமன்றமொன்றில் அல்லது ஓர் ஆணைக்குழுவின் முன்னர் அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரினால் அல்லது சாட்சியினால் அளிக்கப்பட்ட கூற்றுக்கான அல்லது வழங்கப்பட்ட சாட்சியத்துக்கான எதிர்த்தாக்குதலாக –

(அ) குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்குத் தன்னிச்சையாகப் பாரதூரமான ஊறு விளைவிக்கின்ற ; அல்லது

(ஆ) குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை தவறான முறையில் மட்டுப்படுத்துகின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், மேல் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பன்னிரெண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் முப்பதாயிரம் ரூபாவிலான குற்றப் பணத்துக்கும் தண்டனைத்தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

(3) குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்ட எவரையும் அல்லது சாட்சியொருவரை ஆளொருவருக்கெதிராகச் சட்டவலுவுறுத்தல் அதிகாரிக்கு முறைப்பாடொன்றைச் செய்வதனை அல்லது ஏதேனும் கூற்றை அளிப்பதனைத் தடுக்கும் அல்லது எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் அத்தகைய ஆளுக்கெதிராகச் சாட்சியமளிப்பதனைத் தடுக்கும் உட்கருத்துடன் அல்லது அத்தகைய குற்றச்செயலுக்குப்

பலியாக்கப்பட்டவரினால் அல்லது சாட்சியினால் சட்டவலுவுறுத்தல் அதிகாரிக்கு அத்தகைய ஆளுக்கெதிராக அளிக்கப்பட்டவொரு கூற்றுக்கு அல்லது எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் வழங்கப்பட்ட சாட்சியத்துக்கு எதிர்த்தாக்குதலாக -

(அ) அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை ஏதேனும் இடத்தை விட்டுச் செல்லும்படி வலோத்காரத்தின்மூலம் வலுக்கட்டாயப்படுத்துகின்ற அல்லது எவையேனும் ஏமாற்றும் வழிவகைகள்மூலம், அதிகாரத் துஷ்பிரயோகம்மூலம் அல்லது வேறெவையேனும் வலுக்கட்டாயமான வழிவகைகள்மூலம் தூண்டுகின்ற ; அல்லது

(ஆ) அந்தக் குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஆதனத்துக்குத் தவறான முறையிலான இழப்பை, சேதத்தை அல்லது அழிவை விளைவிக்க உட்கருதுகின்ற அல்லது அவ்வாதனத்துக்குத் தவறான முறையிலான இழப்பை, சேதத்தை அல்லது அழிவைத் தாம் விளைவிக்கும் சாத்தியம் உண்டென அறிந்துகொண்டு அத்தகைய இழப்பை, சேதத்தை அல்லது அழிவை விளைவிக்கின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பன்னிரெண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் முப்பதாயிரம் ரூபாவிலான குற்றப்பணத்துக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

(4) எவரேனுமாள், தவறொன்று புரியப்பட்டமைபற்றி அல்லது அத்தகைய ஆளின் அடிப்படை உரிமையொன்றின் மீறுகைபற்றி அல்லது மனித உரிமைமீறல் பற்றி ஏதேனும் சட்டவலுவுறுத்தல் அதிகாரிக்கு அல்லது ஏதேனும் நீதிமன்றத்துக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு ஏதேனும் தகவலை வழங்கியிருந்தமை அல்லது முறைப்பாடொன்றைச் செய்திருந்தமை அல்லது கூற்றொன்றை

அளித்திருந்தமை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது ஆணைக்குழுவொன்றின் முன்னர் சாட்சியம் வழங்கியிருந்தமை அல்லது சட்ட வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்திருந்தமை காரணமாக அல்லது அதன் விளைவாக அல்லது பயனாக, அத்தகைய ஆளுக்கு -

(அ) ஏதேனும் தொல்லையை, மிரட்டுகையை, வலுக்கட்டா யத்தை, முரணான நடாத்துகையை, உடல் அல்லது உளரீதியிலான இன்னலை அல்லது வேறோர் ஆளின் நற்பெயருக்கான இழப்பை அல்லது சேதத்தை ; அல்லது

(ஆ) அத்தகைய வேறு ஆளின் தொழிலிடத்திலான தொழில் நிபந்தனைகளுக்குப் பாதகமான மாற்றமொன்று செய்யப்படுவதனை,

விளைவிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றா ரென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மேல் ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் பதினையாயிரம் ரூபாவிலான குற்றப் பணத்துக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

(5) (அ) தவறொன்று பற்றிய புலனாய்வொன்றைத் தொடங்கும் அல்லது நடாத்தும் நோக்கத்துக் காகக் கொடுக்கப்பட்ட தகவலைப் பெற்றுள்ள வரும் ;

(ஆ) ஒரு தவறு பற்றிய புலனாய்வொன்றின்போது தகவலைச் சேகரித்துள்ளவரும் ; அல்லது

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய தகவலை வேறெவரேனும் ஆளிடமிருந்து பெற்றுள்ளவரும்,

நல்லெண்ணத்துடன் தவிரவும் மற்றும் -

(அ) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது நடவடிக்கைமுறை களுக்கு ;

(ஆ) நீதிமுறை அலுவலரொருவரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு ; அல்லது

(இ) ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அவ்வாறு செய்வதற்கு உரியமுறையில் அதிகார மளிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு,

இணங்கவன்றியும் அல்லது இணங்கியொழுகவன்றியும், இயைபான குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது அத்தகைய தகவலை வழங்கிய சாட்சியாக அல்லது தகவலளிப்பவராக இருக்கக்கூடியவரின் ஆளடையாளம் தொடர்பான அத்தகைய ஏதேனும் தகவலை அல்லது அதன் பாகத்தை மூன்றாம் திறத்தவரொருவருக்கு அளிக்கின்றவரும், வழங்குகின்றவரும் அல்லது கொடுக்கின்றவரும் அல்லது வெளியிடுகின்றவரும் அல்லது வேறுவகையில் பரப்புகின்ற வரும், அதன்மூலம் அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப் பட்டவரின், சாட்சியின் அல்லது தகவலளிப்பவரின் உயிரை ஆபத்துக்குட்படுத்துகின்றவருமான எவரேனுமாள் தவறொன் றைப் புரிகின்றாரென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் பதினையாயிரம் ரூபாவி லான குற்றப்பணத்துக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

(6) தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்டவராக, சந்தேகிக்கப்பட்டவராக அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவராக இருந்து -

(அ) அத்தகைய தவறைப் புரிந்தமைக்காக அத்தகைய ஆளுக்கெதிராகச் சட்ட வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு உட்கருதுகின்ற அல்லது ஆயத்தஞ்செய்கின்ற ; அல்லது

(ஆ) எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு, ஆணைக்குழுவுக்கு அல்லது நீதிமன்றத்துக்கு அத்தகைய ஆளுக்கெதிராகத் தகவலை அல்லது சாட்சியத்தை வழங்கக்கூடிய சாத்தியங்கொண்டவராகவிருக்கின்ற,

வேறெவரேனுமாளுக்கு, தவறைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்ட, சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட அத்தகைய முதற்குறிப்பிடப்பட்ட ஆளுக்கெதிராகச் சட்டவழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்காதிருப்பதற்கு அல்லது உண்மையான தகவலை அல்லது சாட்சியத்தை வழங்காதிருப்பதற்கு அத்தகைய வேறு ஆளைத் தடுக்கும், ஊக்கமிழக்கச்செய்யும் அல்லது செய்யாதிருக்கும்படி வற்புறுத்தும் நோக்குடன், ஏதேனும் அவா நிறைவை முனைகின்ற, வழங்குகின்ற அல்லது கொடுக்கின்ற அந்த எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் பதினையாயிரம் ரூபாவிலான குற்றப்பணத்துக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

(7) அதிகாரசபையிடமிருந்து, பிரிவு உட்பட பொலிசாரிடமிருந்து, ஒரு நீதிமன்றத்திடமிருந்து அல்லது ஓர் ஆணைக்குழுவிடமிருந்து ஏதேனும் பாதுகாப்பை அல்லது உதவியைப் பெறுகின்ற உட்கருத்துடன், தகவல் பொய்யானதென அறிந்துகொண்டு அல்லது பொய்யானதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை உடையவராகவிருந்துகொண்டு அத்தகைய தகவலை வழங்குகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்

படுவதன்மேல், ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் பதினையாயிரம் ரூபாவிலான குற்றப்பணத்துக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

(8) நல்லெண்ணத்துடன் தவிரவும், பின்வருவனவற்றுக்கு, அதாவது :-

(i) சட்டத்தினால் தாபிக்கப்பட்ட எவையேனும் ஏற்பாடுகள் அல்லது நடவடிக்கைமுறைகள் ;

(ii) நீதிமுறை அலுவலரொருவரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று ; அல்லது

(iii) ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அவ்வாறு செய்வதற்கு உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்பட்ட பணிப்புரையொன்று,

என்பனவற்றிற்கு இணங்கவன்றியும் அல்லது இணங்கியொழுகவன்றியும், குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரொருவருக்கு அல்லது ஒரு சாட்சிக்குப் பாதுகாப்பு வழங்குவதற்குப் பொறுப்பாகவுள்ளவரும் அல்லது வழங்குவதில் பங்குபற்றுகின்றவரும் அல்லது உதவுகின்றவரும் அல்லது குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரொருவருக்கு அல்லது ஒரு சாட்சிக்கு அளிக்கப்படும் பாதுகாப்புத் தொடர்பான தகவலை வேறுவகையில் உடையவராகவிருக்கின்றவரும், அத்தகைய தகவலை இன்னோராளுக்கு அளிக்கின்றவரும், வழங்குகின்றவரும் அல்லது கொடுக்கின்றவரும், அதன்மூலம் குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் உயிரை ஆபத்துக்குட்படுத்துகின்றவருமான எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்ப

ளிக்கப்படுவதன்மேல், ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் பதினையாயிரம் ரூபாவிலான குற்றப்பணத்துக்கும் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

*எட்டாம் பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு எத்தனித்தல் அல்லது தூண்டுதல் தவறொன்றாதல்.*

**9.** எட்டாம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தவறைப்புரிவதற்கு எத்தனிக்கின்ற, தூண்டுகின்ற அல்லது வேறெவரேனுமாள் புரிவதற்கு வேண்டுமென்று உதவுகின்ற அல்லது அதன் புரிகைக்காக ஏதேனும் சதியில் ஈடுபடுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அப்பிரிவினால் அத்தவறுக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட அதே தண்டனைக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

*8 ஆம், 9 ஆம் பிரிவுகளின் கீழான தவறு, பிடியாணையின்றிக் கைதுசெய்தகு, மற்றும் பிணையில் விடுபடற்பாலதல்லாத தவறொன்றாதல்.*

**10.** (1) (அ) பிரிவு 8 மற்றும் 9 என்பவற்றின்கீழான தவறொன்று, பிடியாணையின்றிக் கைதுசெய்தகு மற்றும் பிணையில் விடுபடற்பாலதல்லாத தவறொன்றாதல் வேண்டுமென்பதுடன், அத்தகையவொரு தவறுக்குச் சந்தேகிக்கப்பட்ட, குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளெவரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழல்லாது, பிணையில் விடப்படுதலுமாகாது ;

(ஆ) ஆளொருவரைப் பிணையில் விடும்போது மேன்முறையீட்டு நீதிமன்றம், எவ்வாள் தொடர்பில் சந்தேகிக்கப்பட்டவர் தவறைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்படுகின்றதோ அவ்வாளுடனும் மற்றும் அத்தகைய பிணையை அளிக்கின்ற கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவர்களான வேறெவரேனும் ஆட்களுடனும் தொடர்புகொள்வதை அல்லது அவர்களை நெருக்கமாக அண்மிப்பதைத் தடைசெய்கின்ற நிபந்தனையொன்றை விதிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பிரிவு 8 அல்லது பிரிவு 9 என்பதன்கீழ் ஏதேனும் தவறைப் புரிந்துள்ளாரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்கெதிரான விளக்கமொன்று, அந்நீதிமன்றத்தினால் வேறேதேனும் அலுவல்களுக்கு முன்னர் எடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அன்றாட அடிப்படையில் நடாத்தப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அது, குறிப்பாகப் பதியப்படவேண்டிய தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் காரணமாகவன்றி, அத்தகைய விளக்கத்தின் போது பின்போடப்படுதலாகாது.

(3) நீதிமன்றமொன்றினான விசாரணையின் பின்னர், ஆளொருவரினால் புரியப்பட்டதெனச் சார்த்தப்பட்ட ஏதேனும் தவறுதொடர்பில் இயைபான காலத்தில் பிணையிலிருந்த அவ்வாள், 8 ஆம் பிரிவின்கீழ் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளாரென முடிவுசெய்வதற்கு முதற்றோற்றவளவிலான எண்பிப்புச் சான்றுகள் உள்ளனவெனக் காணப்படின், விசாரணையை நடாத்திய நீதிமன்றத்தினால் அத்தகைய ஆளுக்கு அளிக்கப்பட்ட பிணையானது இல்லாதாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள், அவர் எந்தத் தவறு தொடர்பில் பிணையில் விடப்பட்டாரோ அந்தத் தவறுக்கான விளக்கம் முடியும்வரை விளக்கமறியலில் இடப்படுதலும் வேண்டும்.

## பாகம் IV

### குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபையைத் தாபித்தல்

**11.** (1) (இச்சட்டத்தில் “அதிகாரசபை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற்கான தேசிய அதிகாரசபை என அழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

குற்றச் செயலுக்குப் பலியாக்கப் பட்டவர் களினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பிற் கான தேசிய அதிகாரசபை.

(2) அதிகாரசபையானது (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரில் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையுமுடைய கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், அது அத்தகைய பெயரில் வழக்குத் தொடுக்கலாம் ; அத்துடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

*அதிகார சபையின் முகாமைச் சபை.*

**12.** (1) அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைச்சபை ஒன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :-

(i) அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான சொல்லப்பட்ட அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர் ;

(ii) பொலிசுத் திணைக்களத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான சொல்லப்பட்ட அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர் ;

(iii) மகளிர் விவகாரங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான சொல்லப்பட்ட அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர் ;

(iv) சிறுவர்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான சொல்லப்பட்ட அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர் ;

(v) 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்டவரான அத்தகைய ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் ;

(vi) சட்டத்துறைத் தலைமையதிபதியின் நியமத்தர் ஒருவர் ; அத்துடன்

(vii) சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ஒருவரின் பதவி வரிசையை வகிக்கின்றவரான, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் நியமத்தர் ஒருவர் ;

ஆயின், இப்பந்தியின் (iii) ஆம், (iv) ஆம் உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் ஒரு தனி அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுமிடத்து அல்லது அவரின் பொறுப்பி லிருக்குமிடத்து, அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளர் மட்டுமே இப்பந்தியின்கீழ் சபையின் உறுப்பினரொருவராக வருவதற்குத் தகவுடையவராதல் வேண்டும் ;

(ஆ) குற்றவியல்சார்ந்த, குற்றவியல் நீதி முறைமையுடன், மனித உரிமைகளை மேம்படுத்துதலுடனும் பாதுகாத்த லுடனும் அல்லது மருத்துவத்துறையுடன் இணைந் துள்ள அல்லது சம்பந்தப்பட்டுள்ள உயர்தொழில்களில் அல்லது உயர்தொழிற் செயற்பாட்டுத்துறைகளில் கல்வி ரீதியில் அல்லது உயர்தொழில்சார் ரீதியில் தகைமை பெற்றவர்களும் அனுபவமுடையவர்களும் எனத் தெரிவுசெய்யப்பட்ட ஆட்களிடையேயிருந்து சனாதிபதி யினால் நியமிக்கப்பட்டவர்களான, ஐந்து நியமன உறுப்பினர்கள்.

(2) சனாதிபதி, சபையின் உறுப்பினர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைச் சபையின் தவிசாளராகப் பெயர்குறித்தல் வேண்டும் ; அவரே அதிகாரசபையின் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள், சபை உறுப்பினர்களின் நியமனம், சபையின் கூட்டங்கள், உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படற்பாலதான ஊதியம் அத்துடன் சபையின் இலச்சினை என்பவற்றிற்கும் அவை தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அதிகார சபையின் கடமைகளும் பணிகளும்.

**13.** (1) அதிகாரசபையின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :-

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் உரிமைகளினதும், உரித்துடைமைகளினதும் ஏற்றங்கீகாரத்தையும் மற்றும் அவற்றிற்கு மதிப்பளித்தலையும் ஊக்குவித்தலும் ;

(ஆ) சாட்சிகளினது உரித்துடமைகளின் ஏற்றங்கீகாரத்தையும் மற்றும் அவற்றிற்கு மதிப்பளித்தலையும் ஊக்குவித்தலும் ;

(இ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் உரிமைகளையும் மற்றும் சாட்சிகளின் உரித்துடைமைகளையும் பாதுகாத்தலும் அல்லது பாதுகாக்கச் செய்வித்தலும் ;

(ஈ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியொருவரின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின் சார்த்தப்பட்ட மீறுதலொன்று தொடர்பில் அல்லது உடன் நிகழக்கூடிய மீறுதலொன்று தொடர்பில் முறைப்பாடொன்று அல்லது ஏதேனும் தகவல் கிடைக்கப்பெற்றதன் மீது அத்தகைய சார்த்தப்பட்ட மீறுதலையிட்டு அல்லது உடனடியாக நிகழவிருக்கின்ற மீறுதலையிட்டு புலனாய்வு செய்தலும் விசாரணை செய்தலும் மற்றும் இச்சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உரிமைகளி

னதும் உரித்துடைமைகளினதும் பாதுகாப்பையும் மற்றும் மேம்பாட்டையும் உறுதிப்படுத்துவதற்காக அது தொடர்பில் தோதான திருத்த வழிமுறைகளை எடுக்கும்படி ஏதேனும் இயைபான அதிகாரசபையைத் தேவைப்படுத்தலும் ;

(உ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் அவர்களது சிகிச்சை, மீட்டளிப்பு, இழப்புக்கான எதிரீடு அத்துடன் புனர்வாழ்வு என்பவற்றிற்கான தோதான வழிமுறைகள் உட்பட, அவர்களுக்கு அவசியமான உதவியை வழங்குதலும் ;

(ஊ) இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியத்திலிருந்து குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான அளிப்பொன்றை ஆக்குதலும் மற்றும் அந்த நோக்கத்திற்கென செயற்றிட்டம் ஒன்றை அபிவிருத்தி செய்தலும் மற்றும் நடைமுறைப்படுத்துதலும் ;

(எ) இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உரிமைகளும் உரித்துடைமைகளும் தொடர்பாகப் பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குதலும் ;

(ஏ) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உரிமைகளுக்கும் உரித்துடைமைகளுக்கும் பயனளிப்பதற்கும் அத்துடன் குறிப்பாகக் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் -

(i) பயனுறுதியுள்ள பாதுகாப்பையும் ;

(ii) அவசியமான சிகிச்சையையும் புனர்வாழ்வையும் ஆலோசனையையும் ; அத்துடன்

(iii) தோதான வேறு உதவியையும்,

வழங்குதல் தொடர்பாக கடைப்பிடிக்கப்படவேண்டிய அல்லது நடைமுறைப்படுத்தப்படவேண்டிய தோதான வையும் குறிக்கப்பட்டவையுமான வழிமுறைகள் பற்றி இலங்கைப் பொலிசுத் திணைக்களத்திற்கும், வேறு ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திற்கும், நியதிச்சட்ட நிறுவனத்திற்கும் மற்றும் பகிரங்க அலுவலர்களுக்கும் ஒன்றில் பொதுவாக அன்றேல் ஒவ்வொரு விடயத்தின தும் அடிப்படையில் மதியுரை வழங்குதலும் விதப்புரை களைச் செய்தலும் ;

(ஐ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உரிமைகளினதும் உரித்துடைமை களினதும் மேம்பாடு மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கும் மிகச்சிறந்த செயல்முறைகளுக்கும் இசைந்திருப்பதை உறுதிப்படுத்து வதற்காக உளதான கொள்கைகளையும், சட்டவாக்கங் களையும் மற்றும் பல்வேறு அதிகாரசபைகளினால் கடைப்பிடிக்கப்படுவனவும் பின்பற்றப்படுவனவுமான செயல்முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் மீளாய்வு செய்தலும் மற்றும் அத்தகைய மீளாய்வின் அடிப்படையில், விடயத்திற்கேற்ப, தோதான கொள்கைகள், சட்டவாக்கங்கள், செயல்முறைகள் அத்துடன் நடவடிக்கை முறைகள் என்பவற்றின் கடைப்பிடிப்பு, திருத்தம் அத்துடன் பிரயோகம் தொடர்பாக விதப்புரைகளைச் செய்தலும் ;

(ஒ) சமகால அல்லது சமகாலத்தை அண்மித்ததான கட்புல -செவிப்புல இணைப்புக்கள் மூலமான சான்றுகளின் பெறுகையுடன் சம்பந்தப்பட்டனவான மிகச்சிறந்த செயல்முறைகள் பற்றிய தகவலை வேண்டுகோளின்மீது

ஏதேனும் நீதிமன்றத்திற்கு அல்லது ஆணைக்குழுவொன்றுக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்தலும் ;

(ஓ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்கள்மீதும் சாட்சிகள் மீதும் அவர்களது வயது, பால், மதம், மொழி, கலாசார நம்பிக்கைகளும் செயல்முறைகளும், இன அல்லது சமூகப் பூர்வாங்கங்கள் அல்லது இயலாமைகள் அல்லது வேறு ஏதேனும் காரணம் என்பவற்றால் ஏற்படுத்தப்பட்ட ஊறின் அல்லது ஏற்படுத்தப்படக்கூடிய சாத்தியமுள்ள ஊறின் விளைவாக எழுகின்ற, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் தேவைகள் பற்றி அல்லது குறிப்பிட்ட வகுதிகளைச் சேர்ந்த குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் எவையேனும் விசேட தேவைகள் பற்றி, இலங்கைப் பொலிசு அலுவலர்கள், மறியற்சாலைகள் திணைக்களத்தின் அலுவலர்கள், அரசாங்க மருத்துவ அலுவலர்கள், நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சமூகசேவைகளுடன் தொடர்புடைய பகிரங்க அலுவலர்கள் ஆகியோர் உட்பட, சட்டத்தை வலுவுக்கிடுதலில் ஈடுபட்டுள்ள பகிரங்க அலுவலர்களைக் கூர்ந்தறியும் திறன் கொண்டவர்களாகச் செய்வதற்கான வழிமுறைகளை எடுத்தலும் ;

(ஔ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் உரிமைகளினதும் மற்றும் சாட்சிகளினது உரித்துடைமைகளினதும் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கைப் பொலிசு அலுவலர்கள், மறியற்சாலைகள் திணைக்கள அலுவலர்கள், அரசாங்க மருத்துவ அலுவலர்கள் அத்துடன் அரசாங்க சமூகசேவை நிறுவனங்களின் அலுவலர்கள் ஆகியோர் உட்பட நீதிமன்றங்களாலும் ஆணைக்குழுக்களாலும், வேறு எவையேனும் நியாய சபைகளாலும், சட்டத்தை வலுவுக்கிடுதலில் ஈடுபட்

டுள்ள பகிரங்க அலுவலர்களாலும் மற்றும் நியதிச்சட்ட குழுக்களின் அலுவலர்களாலும் நடத்தைக் கோவைகளும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மரபுகளும் மிகச்சிறந்த செயல்முறைகளும் அனுசரிக்கப்படுவதையும் பிரயோகிக்கப்படுவதையும் மேம்படுத்துதலும் மற்றும் உறுதிப் படுத்துதலும் ;

(க) எந்த வழிமுறைகளில் -

(i) குற்றச்செயல் சம்பவங்கள் குறைக்கப்படக் கூடுமோ;

(ii) பலியாக்கப்பட்டவர்கள் மீது குறிக்கப்பட்ட குற்றச்செயல்களின் தாக்கம் குறைக்கப்படக் கூடுமோ அல்லது தடுக்கப்படக்கூடுமோ;

(iii) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்குப் பயனுறுதியுடன் சிகிச்சையளிக்கப்பட, புனர்வாழ்வளிக்கப்பட, ஆலோசனை வழங்கப்பட உதவியளிக்கப்பட நட்டஈடு வழங்கப்பட அத்துடன் அவர்கள் பாதுகாக்கப்படக் கூடுமோ;

(iv) சாட்சிகளின் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்கு முன்னர் வாக்குமூலங்களை அளிப்பதற்கு அல்லது நீதிமன்றங்களின் முன்னிலையிலும் அத்துடன் எவையேனும் ஆணைக்குழுக்களினதும் வேறு நியாயசபைகளினதும் முன்னிலையிலும் வழக்கு நடவடிக்கைகளில் அச்சமின்றி சாட்சியம் அளிப்பதற்கு உகந்ததான சூழல் உருவாக்கப்படக்கூடுமோ; அத்துடன்

(v) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்கப்படக்கூடுமோ,

அந்த வழிமுறைகளையிட்டு ஆராய்ச்சி நடாத்துதலும் அல்லது ஆராய்ச்சி நடாத்தப்படுவதை ஊக்குவித்தலும்;

(ங) குற்றச்செயல் சம்பவங்களைக் குறைப்பதற்கும் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்கப்படுவதற்கு வசதியளிக்கப்படுவதற்கும் எனத் தோதான அரசாங்க நிறுவனங்களால் கடைப்பிடிக்கப்படக்கூடிய சமூக, சுகாதார, கல்வி, பொருளாதார மற்றும் குற்றத் தடுப்புக் கொள்கைகளை அத்தகைய நிறுவனங்களுக்கு விதந்துரைத்தலும்;

(ச) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்குக் குற்றவியல் நீதிமுறைமையில் தண்டனைத் தீர்ப்பு விருப்புத் தெரிவொன்றாக மீட்டளிப்பு வழிமுறைகள் அபிவிருத்தி செய்யப்படுவதையும் கடைப்பிடிக்கப்படுவதையும் மற்றும் நடைமுறைப்படுத்தப்படுவதையும் மேம்படுத்துதலும் ;

(ஞ) குற்றவியல் நீதி நிர்வாக முறையொன்றாகவும் குற்றவியல் நீதிமுறைமையில் தண்டனைத் தீர்ப்பளிக்கும் விருப்பத் தெரிவொன்றாகவும் மீளளிக்கும் நீதிவழிமுறைகள் அபிவிருத்தி செய்யப்படுவதையும் கடைப்பிடிக்கப்படுவதையும் மற்றும் நடைமுறைப்படுத்தப்படுவதையும் மேம்படுத்துதலும் ;

(ட) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்குவதற்கான செயற்றிட்டம் ஒன்றை அபிவிருத்திசெய்தலும், கடைப்பிடித்தலும் மற்றும் நடைமுறைப்படுத்துதலும் ;

(ண) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவைத் தாபித்தல் மற்றும் பேணுதல் தொடர்பில் வழிகாட்டு நெறிகளை வழங்குதலும் ;

(து) ஆண்டுதோறும் பாராளுமன்றத்திற்கு -

(i) அதிகாரசபை இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்குப் பயனளித்துள்ள முறை ;

(ii) அதிகாரசபையின் கடமைகளும், பணிகளும் புரியவும் நிறைவேற்றவும்பட்டமை ; அத்துடன்

(iii) அவசியமான கொள்கை மற்றும் சட்டவாக்கச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகள் ,

என்பன பற்றி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தலும் ; அத்துடன்

(ந) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான எவையேனும் மேலதிகப் பணிகளையும் செயற்பாடுகளையும் செய்தலும் அல்லது புரிதலும்.

(2) அதிகாரசபை (1) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆளுக்கு அல்லது அதிகாரிக்கு எவையேனும் விதப்புரைகளைச் செய்யுமிடத்து அல்லது எவையேனும் வழிமுறைகளை நிறைவேற்றுமாறு எவரேனும் ஆளை அல்லது அதிகாரியைத் தேவைப்படுத்துமிடத்து -

(அ) அத்தகைய விதப்புரைக்குப் பயனளிப்பதும் அல்லது அத்தகைய வழிமுறையை நிறைவேற்றுவதும் அத்துடன் அத்தகைய நிகழ்வுபற்றி அதிகாரசபைக்குத் திருப்பி அறிக்கையிடுவதும் ; அல்லது

(ஆ) சம்பந்தப்பட்ட ஆள் அல்லது அதிகாரி விதப்புரைகளுக்குப் பயனளிக்க இயலாதவராக அல்லது வழிமுறைகளை நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து, அதற்கான காரணங்களைக் கொடுத்து அத்தகைய இயலாமை பற்றி அதிகாரசபைக்குத் திருப்பி அறிக்கையிடுவதும்,

அத்தகைய ஆளின் அல்லது அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் சம்பந்தப்பட்ட ஆளினால் அல்லது அதிகாரியால் எவையேனும் விதப்புரைகளுக்கு அல்லது வழிமுறைகளுக்குப் போதியளவிலும் தகுந்தமுறையிலும் பயனளிக்கப்படுவதை அல்லது அது நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்யும் நோக்கத்திற்கென, அதிகாரசபையானது விதப்புரைகளுக்குப் பயனளிக்கையில் அல்லது சம்பந்தப்பட்ட வழிமுறைகளை நிறைவேற்றுகையில் அத்தகைய ஆளினால் அல்லது அதிகாரியால் புரியப்படும் எல்லாச் செயற்பாடுகளையும் கண்காணித்தல் வேண்டும்.

*அதிகார சபையின் தத்துவங்கள்.*

**14.** (1) அதிகாரசபை பின்வருவனவற்றிற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் உரிமை அல்லது உரித்துடைமையொன்றில் சார்த்தப்பட்ட மீறலொன்றையிட்டு அல்லது உடன்நிகழவுள்ள மீறலொன்றையிட்டு புலனாய்வொன்றை நடாத்தும் நோக்கத்திற்காக :-

(i) நீதிமுறை அலுவலர் ஒருவர் அல்லது ஆணைக் குழுவொன்றின் ஆணையாளர் ஒருவர் அல்லாத வேறு எவரேனும் ஆளை, புலனாய்வு அல்லது விசாரணையொன்றில் பங்குபற்றுவதற்கென அதிகாரசபையின் முன்னர் தோன்றுமாறு தேவைப்படுத்துதல் ;

(ii) நீதிமன்றமொன்று அல்லது ஆணைக்குழுவொன்று அல்லாத வேறு எவரேனும் ஆளை, புலனாய்வைப் பற்றிய குறிப்புக்கள், தகவல் புத்தகப் பிரித்தெடுப்புக்கள் மற்றும் பொலிசாரின் அலுவலர்கள் வருகைப் புத்தகப் பிரித்தெடுத்தல்கள் என்பன உட்பட, ஏதேனும் ஆவணத்தை, அதன் அத்தாட்சிப்படுத்துப்பட்ட பிரதியொன்றை அல்லது அவரது உடைமை

யிலுள்ள அல்லது கட்டுக்காப்பிலுள்ள வேறு பொருளைப் பரிசோதனைக்கும் பிரதியெடுத்தலுக்கும் என அதிகாரசபையின் முன்னர் காண்பிக்குமாறு தேவைப்படுத்துதல் ;

(iii) நீதிமன்றமொன்று அல்லது ஆணைக்குழுவொன்று அல்லாத வேறு எவரேனும் ஆளை, அவர் உடைமையில் கொண்டிருக்கும் சாத்தியமுள்ள தகவலை அதிகாரசபைக்கு எழுத்தில் வழங்குமாறு தேவைப்படுத்துதல் ;

(iv) நீதிமுறை அலுவலர் ஒருவர் அல்லது ஏதேனும் ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவர் அல்லது வேறு எவரேனும் ஆளை நேர்காணலும் அவரது வாக்குமூலத்தைப் பதிவுசெய்தலும் ;

(v) ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் ஏதேனும் வழக்கின், குற்றவழக்கின் அல்லது வேறு வழக்கு நடவடிக்கைகளின் எவையேனும் நடவடிக்கைகளினதும், அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் வழக்குப் பதிவேடொன்றில் அல்லது கோப்பொன்றில் கோப்பிடப்படக்கூடியனவான ஆவணங்களினதும் மற்றும் வேறு விடயங்களினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளைப் பெறுவதற்கு அத்தகைய நீதிமன்றத்திற்கு அல்லது ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்தலும் அத்துடன் அவற்றைப் பெறுவதற்கு உரித்துடையதாக இருத்தலும் ;

(vi) புலனாய்வு, விசாரணை, விளக்கம் அல்லது வேறு வழக்கு நடவடிக்கை உட்பட, ஏதேனும் இடத்தினுட் பிரவேசித்தலும், அவ்விடத்தில் இடம்பெறும் ஏதேனும் சம்பவத்தை, அமை

விடத்தை அல்லது செயற்பாட்டைச் சோதனையிடுதலும், பரிசோதனை செய்தலும் அல்லது அவதானித்தலும் அத்துடன் பதிவு செய்தலும் ;

(vii) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் மேம்படுத்துவதற்காக அல்லது பாதுகாப்பதற்காக அல்லது இயைபான குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் உரிமைகளின் அல்லது உரித்துடைமைகளின் மீறலின் விளைவொன்றாக விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்தைப் பரிகரிப்பதற்காகத் தோதான கட்டளையொன்றை ஆக்குதலும் மற்றும் அதற்கான அத்தகைய வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதனைப் பணித்தலும், அதற்கு மதியுரை வழங்குதலும் அல்லது விதந்துரைத்தலும் ;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(இ) அதன் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல் ;

(ஈ) அதன் நிதியத்தின் வரவிலிருக்கும் பணங்களைத் தோதானதும் பாதுகாப்பானதுமான முறையொன்றில்

முதலீடுசெய்தலும் வங்கிகளில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்பீட்டுக் கணக்குகளைத் திறத்தலும் மற்றும் பேணுதலும் ;

(ஊ) அதன் கடமைகளையும் பணிகளையும் தகுந்தவாறு புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அலுவலர்களையும், ஆலோசகர்களையும் அத்துடன் மதியுரைஞர்களையும் நியமித்தல், பதவிநீக்குதல் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் ;

(ஊ) பிரிவு 24(3)இன் ஏற்பாடுகளுக்கமைவாக, இலங்கையினுள்ளே அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள மூலங்களிலிருந்து நன்கொடைகளையும், கொடைகளையும், விருப்பாவணக் கொடைகளையும் அத்துடன் மானியக்கொடைகளையும் பரிந்துகேட்டலும், ஏற்றுக் கொள்ளுதலும், பெற்றுக்கொள்ளுதலும் மற்றும் அதன் கடமைகளையும் பணிகளையும் தகுந்தவாறு நிறைவேற்றுவதற்கு அவற்றைப் பிரயோகித்தலும் ;

(எ) இச்சட்டத்தின்கீழ் அதன் கடமைகளையும் பணிகளையும் தகுந்தவாறு புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு அத்துடன் மேலதிகமான எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அதிகார சபையால் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் அதிகாரசபையை அவமதித்த தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) அதிகாரசபைக்கெதிராகப் புரியப்பட்ட ஒவ்வோர் அவமதிப்புத் தவறும், அது உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்துக் கெதிராகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறு என்றாற்போன்று அந்நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டு

மென்பதுடன், அத்தகயை ஒவ்வொரு தவறையும் விளங்குவதற்கான நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்துக்கு இத்தால் உரித்தாக்கவும்படுகின்றது.

(4) அதிகாரசபைக்கெதிராக (2) ஆம் உட்பிரிவின்கீழான அவமதிப்புத் தவறொன்றுக்கு ஆளொருவர் குற்றவாளியாகவுள்ளாரென அதிகாரசபை தீர்மானிக்குமிடத்து, அதிகாரசபை, அத்தகைய தீர்மானத்தை எடுத்துக்கூறுகின்ற சான்றிதழொன்றை உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கலாம். அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும் அதிகாரசபையின் தவிசாளரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக, கவனத்திற்கொள்வதற்கு உயர்நீதிமன்றம் தகுதியானதெனக் கருதக்கூடிய அவமதிப்புத் தவறொன்றைத் தண்டிப்பதற்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், (4) ஆம் உட்பிரிவின்கீழ் கையொப்பமிடப்பட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட சான்றிதழொன்றெனக்கொள்ளப்படுகின்ற ஏதேனும் ஆவணம் -

(அ) சான்றில் ஏற்றுக்கொள்ளப்படுதலும், முரணாக எண்பிக்கப்பட்டாலொழிய, மேலதிக எண்பிப்பின்றி அத்தகையவொரு சான்றிதழாக உள்ளதெனக் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சான்றிதழில் எடுத்துக்கூறப்பட்ட தீர்மானம் அதிகாரசபையினால் செய்யப்பட்டதென்பதற்கும் தீர்மானத்தில் கூறப்பட்ட நிகழ்வுகளிற்கும் சான்றாகவிருத்தல் வேண்டும்.

(6) அதிகாரசபைக்கெதிரான ஏதேனும் சார்த்தப்பட்ட அவமதிப்புத் தவறைத் தண்டிப்பதற்காக இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், அதிகாரசபையின் உறுப்பினரெவரும், அவரது சொந்தச் சம்மதத்துடன் தவிரவும் இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சாட்சியாகக் கட்டளைவிட்டழைக்கப்படுதலோ அல்லது விசாரணை செய்யப்படுதலோ ஆகாது.

பணிப்பாளர் தலைமை யதிபதி.

**15.** (1) அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும். இவர் குற்றவியல் நீதிமுறைமையுடன் அல்லது சட்டத்தை வலுவுக்கிடுதலுடன் தொடர்புடைய உயர்தொழில்சார் செயற்பாட்டில் உயர்தொழில்ரீதியில் தகைமையும் அனுபவமும்கொண்ட ஆளொருவராகவிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர் சபையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி அதிகாரசபையின் பிரதான நிறைவேற்றலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அதிகாரசபையின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும் நிர்வகிப்பதற்கும் அவசியமான அத்தகைய எல்லாக் கடமைகளையும் நிறைவேற்றுவதற்குப் பொறுப்புடையவராதலும் வேண்டும்.

(4) சபையானது, அதிகாரசபையின் கடமைகளுள் மற்றும் பணிகளுள் எவற்றையும் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாமென்பதுடன், அவ்வாறு கையளிக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அதன் தத்துவங்களுள் அத்தகையவற்றையும் கையளிக்கலாம்.

புலனாய்வுகளும் விசாரணைகளும்.

**16.** (1) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவரினது அல்லது சாட்சியொருவரினது உரிமையின் அல்லது உரித்துடைமையின் சார்த்தப்பட்ட மீறுதலொன்று அல்லது உடனிகழவுள்ள மீறுதலொன்று தொடர்பான ஏதேனும் முறைப்பாடு அல்லது தகவல் பற்றிய அதிகாரசபையினாலான புலனாய்வொன்று அதன் சார்பாக அதிகாரசபையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அதன் அலுவலர் ஒருவரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும் ; அவர் புலனாய்வுக் குறிப்புக்கள் உள்ளடங்கலாக அத்தகைய புலனாய்வு பற்றிய அறிக்கையை சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) (அ) சபையானது அத்தகைய அறிக்கையானது குற்றச்செயலுக்கு பலியாக்கப்பட்டவரொருவரின் அல்லது சாட்சியொருவரது உரிமையின் அல்லது உரித்துடைமையின் சார்த்தப்பட்ட மீறுதலொன்றை அல்லது உடனிகழவுள்ள மீறுதலொன்றை வெளிக்காட்டுகின்றதென அபிப்பிராயப்படுகின்றவிடத்து, சபையானது விசாரணையொன்றை நடாத்துவதற்கென அதன் உறுப்பினர்களினால் தம்முள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சபையின் மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஒரு குழாத்தை நியமித்தல் வேண்டும்.

(ஆ) சபையானது, அதன் தவிசாளராகவிருப்பதற்குக் குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) பதின்நான்காம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) முதல் (iv) வரையிலான உட்பந்திகளின் ஏற்பாடுகள், ஒரு குழாத்தினால் விசாரணையொன்று நடாத்தப்படுவதற்கும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குழாத்தினால் விசாரணைசெய்யப்படும் ஏதேனும் கருமம் தொடர்பாகக் குழாத்தின் உறுப்பினர்களிடையே அபிப்பிராய பேதம் ஒன்று இருக்கும் விடயத்தில், பெரும்பான்மையோரின் அபிப்பிராயம் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழான விசாரணை முடிவுறும்போது, குழாமானது, விசாரணைசெய்யப்பட்ட கருமம் மீதான அதன் விதப்புரைகளுடன் சேர்த்து, அதுபற்றிய அறிக்கையொன்றைச் சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) ஒரு குழாத்தின் அறிக்கையைப் பெற்றதன்மேல், சபையானது, தகுதியானதும் தோதானதுமென அது கருதக்கூடிய வாறு அதன்மீது அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

பணிப்பாளர் தலைமையதிபதி விசாரணைகளில் உதவுதல்.

**17.** இச்சட்டத்தின்கீழான விசாரணை ஒன்றை நடாத்துகையில், குழாம், பணிப்பாளர் தலைமையதிபதியினால் உதவிசெய்யப்படலாம்.

அதிகாரசபையின் நிதியமும் அதன் நிதியாண்டும்.

**18.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் நிதியத்திற்குப் பின்வருவன வரவுவைக்கப்படுதல் வேண்டும் :-

(அ) அதிகாரசபையின் பாவனைக்கெனப் பாராளுமன்றத்தால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) இலங்கைக்குள்ளேயுள்ள அல்லது இலங்கைக்கு வெளியிலுள்ள மூலங்களிலிருந்து நன்கொடைகள், கொடைகள், விருப்பாவணக்கொடைகள் அத்துடன் மானியக்கொடைகள் என்றவகையில் அதிகாரசபையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபை அதன் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் அதனால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) சபையானது அதிகாரசபையின் வரவுகளும், செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் அதன் வேறு எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

## பாகம் V

## குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவர் களுக்கும் சாட்சிகளுக்கு மான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு.

**19**. (1) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியானவர், திணைக்களம், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிக்கும் நோக்கத்திற்காக, அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடனும் மற்றும் அந்நோக்கத்திற்காக அதிகாரசபையால் வழங்கப்படவேண்டிய வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றியும் "குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவு" என அழைக்கப்படவேண்டிய பிரிவொன்றைத் தாபித்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் நியமத்தராக பிரிவு 12(1)(அ)(vii) இல் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு சபையின் உறுப்பினரொருவராகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரின் மேற்பார்வையின்கீழ் வருகின்றவரான சிரேஷ்ட பொலிசுக் கண்காணிப்பாளர் ஒருவர் பிரிவிற்குப் பொறுப்பானவராக அமர்த்தப்படுதல் வேண்டும்.

(3) (அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் பயனுறுதியானதும் அவசியமானதுமான பாதுகாப்பை வழங்குவதும் ; அத்துடன்

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்கள் மீதும் சாட்சிகள்மீதும் அவர்களது ஆதனத்தின் மீதும் புரியப்படுகின்ற அச்சுறுத்துதல், பழிவாங்குதல், மிரட்டுதல், எதிர்த்தாக்குதல் அல்லது ஏதேனும் தீங்கு அல்லது தொல்லை பலவந்தப்படுத்துதல் அல்லது வன்முறை தொடர்பான எவையேனும் முறைப்பாடுகளை,

சார்த்துரையை அல்லது தகவலைப் பற்றியும் அத்துடன் இச்சட்டத்தின் 8 ஆம் அல்லது 9 ஆம் பிரிவின் கீழ்ப் புரியப்பட்ட ஏதேனும் தவறு பற்றியும் தானாகவோ அல்லது வேறு எவரேனும் பொலிசு அலுவலர்களின் உதவியுடனோ புலனாய்வு செய்வது,

பிரிவின் கடமையாதல் வேண்டும்.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிக்கும் நிகழ்ச்சித் திட்டம்.

**20.** (1) பிரிவானது, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் சாத்தியமுள்ள அல்லது உளதான அச்சுறுத்துதலிலும், தீங்கிலும், பழிவாங்குதலிலும், எதிர்த் தாக்குதலிலும் அத்துடன் மிரட்டுதலிலுமிருந்து அவசியமான எல்லா உதவிகளையும் பாதுகாப்பையும் அளிப்பதற்குப் பயனுறுதியுள்ள வழிமுறைகளை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டிய நிகழ்ச்சித்திட்டமான "குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்" ஒன்றை அந்நோக்கத்திற்கென அதிகாரசபையால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின் மீது வகுத்தலும் மற்றும் நடைமுறைப் படுத்துதலும் வேண்டும்.

(2) தீங்கை, பழிவாங்கலை, மிரட்டுதலை குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர் அவரால் என்ன நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதுடன், குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சிகள் அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் உதவிக்கும் பாதுகாப்பிற்கும் விண்ணப்பித்தும் அவற்றைப் பெறக்கூடியமுறை உட்பட பிரிவால், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வரையப்பட்ட குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிப்பது பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பது பிரிவின் கடமையாதல் வேண்டும்.

(3) பிரிவானது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரை அல்லது சாட்சியொருவரை -

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரால் அல்லது சாட்சியொருவரால் செய்யப்படும் வேண்டுகோள் ஒன்றின் மீது ;

(ஆ) அதிகாரசபையால் செய்யப்பட்ட விதப்புரையொன்றின் மீது ;

(இ) சட்டத்தை வலுவுக்கிடும் ஏதேனும் அதிகாரசபையால் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றின் மீது ; அல்லது

(ஈ) ஒரு நீதிமன்றத்திடமிருந்து அல்லது ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட அறிவிப்பொன்றின் மீது,

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிக்கும் அதன் நிகழ்ச்சித்திட்டத்தினுள் அனுமதிப்பதனைப் பொறுப்பேற்கலாம்.

(4) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு உதவியும் பாதுகாப்பும் வழங்குதலானது அச்சுறுத்துதல் பற்றிய கணப்பீடொன்று நடத்தப்பட்டதன் பின்னரும் அத்துடன் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சம்மதத்துடனும் பயனுறுத்தப்படுதல் வேண்டும்.

(5) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் அளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் பிரிவானது, பிரிவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளுமாறு சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியைத் தேவைப்படுத்தலாம்.

## பாகம் VI

### பாதுகாப்புப் பெறுவதற்கு குற்றச்செயல்களுக்குப் பலியாக் கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்குமுள்ள உரித்துடைமைகள்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்ட வர்களுக்கும் சாட்சிகளுக்கும் பாதுகாப் பளிக்கும் கடமை.

**21.** (1) தவறொன்றைவிட்டு அல்லது அடிப்படை உரிமை யொன்றிலான தலையீட்டையிட்டு அல்லது மனித உரிமை யொன்றின் மீறுகையையிட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் ஏதேனும் புலனாய்வில் அல்லது விசாரணையில் தமது ஒத்துழைப்பின் அல்லது பங்கேற்பின் காரணமாக அல்லது ஏதேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கையில் முன்னப்பட்ட தமது சமுகமளிப்பு அல்லது பங்கேற்புக் காரணமாக தமக்கு ஏதேனும் ஊறுவிளைவிக்கப்படும் என நம்புவதற்கு நியாயமான ஏதுவைக் கொண்டுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர், அத்தகைய உண்மையான அல்லது சாத்தியமுள்ள ஊறிலிருந்து பாதுகாப்புக் கோருவதற்கு உரித்து டையவராதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ்ப் பாதுகாப்பிற்கான வேண்டுகோள் ஒன்று அதிகாரசபைக்கு பிரிவுக்கு எந்த நீதிமன்றத் தின் முன்னிலையில் இயைபான நீதிமுறை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளனவோ அந்த நீதிமன்றம் ஒன்றுக்கு அல்லது நடவடிக்கைகள் முடிவுறா திருக்குமிடத்து அல்லது நடத்தப்பட்டுள்ளவிடத்து ஆணைக் குழுவுக்கு அல்லது ஏதேனும் பொலிசு நிலையத்தின் பொறுப் பதிகாரிக்குச் செய்யப்படலாம்.

பாதுகாப் பளிப்பின் தன்மையும், தொடக்கமும் கால எல்லையும் மற்றும் முடிவுறுத்து தலும்.

**22.** (1) பாதுகாப்பிற்கான தேவையும் மற்றும் அவசியமான வளங்களின் இருப்பும் கருத்திற்கொள்ளப்படுவதன்மீதும் மற்றும் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு அமைவாகவும் அதிகாரசபை, பிரிவு அல்லது ஒரு ஆணைக்குழு குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சி ஒருவருக்கு வழங்கப் படக்கூடியதான வழிமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்க லாம் :-

(அ) ஆளுக்கும் ஆதனத்திற்கும் பாதுகாப்பு ;

(ஆ) உறைவிடம் உட்பட தற்காலிக தங்குமிட வசதி ;

(இ) விடயத்திற்கேற்ப குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவரின் அல்லது சாட்சியின் சம்மதததத்துடன் நிரந்தர மீளமர்த்துகை ;

(ஈ) தற்காலிக அல்லது நிரந்தரத் தொழில் ;

(உ) மீள அடையாளம் காணல் ; அத்துடன்

(ஊ) விடயத்திற்கேற்ப அதிகாரசபை, பிரிவு அல்லது ஒரு ஆணைக்குழு அவசியமானதெனக் கருதவேண்டிய வேறு ஏதேனும் வழிமுறை.

(2) விடயத்திற்கேற்ப அதிகாரசபை, பிரிவு அல்லது ஒரு ஆணைக்குழு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட எவரிடமிருந்தும் அல்லது எவரேனும் சாட்சியிடமிருந்து குற்றப்புலனாய்வொன்று மேற்கொள்ளப்படும்பொழுதாயினுஞ்சரி அல்லது அதன் பின்னராயினுஞ்சரி, ஏதேனும் தகவல் அல்லது முறைப்பாடு கிடைக்கப்பெற்றதன்மீது உடனடியாக ஆணைக்குழு ஒன்றினால் ஏதேனும் புலனாய்வின் அல்லது விசாரணையின் முன்னராயினும்சரி, அதன்பொழுதாயினும்சரி அல்லது அதன் பின்னராயினும்சரி அத்துடன் ஏதேனும் நீதிமுறை நடவடிக்கைக்கு முன்னராயினுஞ்சரி, அதன்பொழுதாயினும்சரி அல்லது அதன்பின்னராயினும்சரி அத்தகைய குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்குப் பாதுகாப்பை வழங்கலாம்.

(3) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட எவருக்கும் அல்லது எவரேனும் சாட்சிக்கு பாதுகாப்பு அல்லது உதவி வழங்கும் பொழுது பிரிவானது அதிகாரசபையால் செய்யப்பட்ட மதியுரைக்கும் விதப்புரைக்கும் இணங்கச் செயலாற்றுதல் வேண்டும்.

(4) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட எவருக்கும் அல்லது சாட்சியொருவருக்கு பாதுகாப்பு அல்லது உதவி வழங்குகையில் பிரிவால் ஏதேனும் அமைச்சிடம், ஏதேனும் அரசாங்கத் திணைக் களத்திடம், நியதிச்சட்ட நிறுவனத்திடம் அல்லது எவரேனும் பகிரங்க அலுவலரிடம் உதவிக்கான வேண்டுகோளொன்று செய்யப்படுமிடத்து, காட்டப்பட்ட காரணங்களுக்காக அவ்வாறு செய்வதற்கு இயலாதிருந்தாலன்றி, விடயத்திற்கேற்ப சம்பந்தப் பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு நேரடியாக பாதுகாப்பையும் உதவியையும் வழங்குவது அல்லது பிரிவால் வேண்டப்பட்ட உதவியை வழங்குவது விடயத்திற்கேற்ப அத்தகைய அமைச்சின், அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது நியதிச்சட்ட நிறுவனத்தின் அல்லது அத்தகைய பகிரங்க அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(5) அதிகாரசபை, பிரிவுக்குப் பொறுப்பாகவுள் சிரேஷ்ட பொலிசுக் கண்காணிப்பாளர் அல்லது ஒரு ஆணைக்குழு -

(அ) அத்தகைய பாதுகாப்பிற்கான அல்லது உதவிக்கான தேவை இனிமேலும் இல்லாதிருக்குமிடத்து ; அல்லது

(ஆ) அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி -

(i) அத்தகைய பாதுகாப்பு அல்லது உதவி முடிவுறுத்தப்படுதல் வேண்டுமென வேண்டு கோள் விடுக்குமிடத்து ;

(ii) வழங்கப்பட்ட அத்தகைய பாதுகாப்பை அல்லது உதவியைப் பெற மறுக்குமிடத்து ;

(iii) வழங்கப்பட்ட பாதுகாப்பை அல்லது உதவி யைத் துஷ்பிரயோகம் செய்யுமிடத்து ;

(iv) ஏதேனும் சமாதானக் குலைவைப் புரியுமிடத்து அல்லது குற்றம்பகரத்தகு தவறொன்றைப் புரியுமிடத்து ;

(v) செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நியதிகளுக்கு முரணகாச் செயற்படுமிடத்து ; அல்லது

(vi) பாதுகாப்பை அல்லது உதவியைப் பெறும் பொருட்டு ஏதேனும் பொய்யான தகவலை, கூற்றை, முறைப்பாட்டை அல்லது சாட்சியத்தைக் கொடுத்திருப்பதாகக் காணப்படுமிடத்து அல்லது இச்சட்டத்தின் நியதிகளின்படி உதவியை அல்லது பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டு சட்டத்தை வலுவுக்கிடும் ஏதேனும் அதிகாரசபைக்கு, நீதிமன்றத்திற்கு அல்லது ஆணைக்குழுவிற்குப் பொய்யான தகவலை, கூற்றை, முறைப்பாட்டை அல்லது சாட்சியத்தை வழங்குமிடத்து,

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட எவருக்கும் அல்லது சாட்சி எவருக்கும் பாதுகாப்பு அல்லது உதவி வழங்குவதனை நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரிடமிருந்து அல்லது சாட்சியொருவரிடமிருந்து வேண்டுகோளொன்று கிடைப்பதன் மேல் பொலிசு நிலையமொன்றின் பொறுப்பதிகாரி அவசியமான நடவடிக்கையை எடுத்தல்.

**23.** 21 ஆம் பிரிவின்கீழ் வேண்டுகோளொன்று கிடைக்கப்பெற்ற பொலிசு நிலையமொன்றின் பொறுப்பதிகாரி ஒருவர் கிடைக்கப்பெற்ற வேண்டுகோளொன்றையிட்டு உடனடியாகப் புலனாய்வு அல்லது விசாரணை செய்ய அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், சூழ்நிலைகள் அவ்வாறு தேவைப்படுத்துமாயின், அவசியமான ஏதேனும் பாதுகாப்பை உடனடியாக வழங்குதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்றமையையும் மற்றும் பெறப்பட்ட தகவல் தொடர்பாக அவரது கண்டுபிடிப்புக்கள் உட்பட அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்றதையடுத்து அவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான தகவலையும் அதிகாரசபைக்கும் மற்றும் பிரிவுக்கும் தெரிவித்தலும் வேண்டும்.

பாதிக்கப்படும் சாத்தியமுள்ள பலியாக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் அதிகாரசபை அல்லது ஆணைக்குழு பாதுகாத்தல்.

**24.** (1) குறிப்பாகப் பாதிக்கப்படும் சாத்தியமுள்ள குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் அல்லது சாட்சிகளின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு விதிவிலக்கான சூழ்நிலைகளின்கீழ் அதிகாரசபையானது, ஒன்றில் நீதிமன்றம் ஒன்றிலிருந்து அல்லது ஆணைக்குழு ஒன்றிடமிருந்து பெறப்பட்ட அறிவித்தல் ஒன்றின்மீது அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மீது செயற்பட்டு, தானாகவோ அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் அல்லது ஒழுங்கமைப்பின் உதவியுடனோ, விடயத்திற் கேற்ப, அத்தகையவொரு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட வருக்கு அல்லது சாட்சியொருவருக்கு நேரடியாகப் பாதுகாப்பை வழங்குதல் வேண்டும்.

(2) (அ) பாதிக்கப்படும் சாத்தியமுள்ள குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் அல்லது சாட்சிகளின் நலனைப் பாதுகாக்கும் அல்லது பொருட்டு ஆணைக்குழு குற்றச்செயல் களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் வேண்டுகோள் ஒன்றின் மீது செயற்பட்டு அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மீது, அதிகாரசபைக்கு முன்னறிவித்தல் கொடுத்ததன் பின்னர் தானாகவோ அல்லது எவரேனும் பெயர் குறிப்பிட்ட பகிரங்க அலுவலரின் உதவியுடனோ, எந்தக் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் கூற்றை அல்லது சாட்சியத்தை ஆணைக்குழு பதிவுசெய்ய முன்னுகின்றதோ அல்லது ஏற்கனவே பதிவு செய்துள்ளதோ அந்தக் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சி ஒருவருக்கு நேரடியாகவோ பாதுகாப்பை வழங்கலாம்.

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட நிலைமையொன்றில் சம்பந்தப்பட்ட ஆணைக்குழுவின் முன்னங்கீகாரத்துடனும் மற்றும் அதிகாரசபைக்கு அதனைப்பற்றிய அறிவித்தலை வழங்கியதன் பின்னரும் மாத்திரமே பாதுகாப்பை வழங்குதல் வேண்டும்.

(இ) ஆணைக்குழுவானது குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சி ஒருவருக்குத் தானாகவோ அல்லது பெயர்குறிப்பிட்ட பகிரங்க அலுவலர் ஒருவரின் உதவியுடனோ பாதுகாப்பை வழங்கத் தீர்மானிக்கும் நிலைமை ஒன்றில் ஆணைக்குழுவானது பகிரங்க அலுவலர் ஒருவராக அல்லாதவரான வேறு எவரேனும் ஆளிடமிருந்து வளங்கள் உட்பட அத்தகைய நோக்கத்திற்கென மதியுரையை, சேவைகளை அல்லது உதவியைப் பெறுதலாகாது :

ஆயின், எவ்வாறாயினும் ஆணைக்குழு விடயத்திற்கேற்ப அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சிக்குப் பாதுகாப்பை வழங்கும் பொறுப்பை ஒன்றில் அதிகாரசபைக்கு அல்லது பிரிவுக்கு ஏதேனும் நேரத்தில் கைமாற்றலாம் என்பதுடன், பொறுப்பு அவ்வாறு கைமாற்றப்படு மிடத்து, அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட வருக்கு அல்லது சாட்சிக்கு அவசியமான பாதுகாப்பை வழங்கு வதனைப் பொறுப்பேற்றல், அதிகாரசபையின் அல்லது பிரிவின் கடமையாதலும் வேண்டும்.

(3) அதிகாரசபை, பிரிவு அல்லது ஒரு ஆணைக்குழு குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சி ஒருவருக்கு உதவி அல்லது பாதுகாப்பு வழங்குகையில் சட்டத்துறை தலைமையதிபதியினதும் வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் முன் அனுமதி இல்லாமல், ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து அல்லது வெளிநாட்டு அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பின் உதவியைப் பெறுதலாகாது. மற்றும் அத்தகைய உதவியை வழங்குதலானது சட்டத்துறைத் தலைமையதிபதியாலும் மற்றும் அத்தகைய செயலாளரினாலும் கருத்திற் கொள்ளப்பட்டு சாத்தியப்படக்கூடியளவு விரைவில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**25.** (1) ஒரு நீதிமன்றம் அல்லது ஒரு ஆணைக்குழு அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது அததகைய ஆணைக்குழுவின் முன்னிலையில்லுள்ள எவையேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் ஆணைக்குழு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சி ஒருவருக்கு உதவி அல்லது தீங்கிலிருந்து, அச்சுறுத்தலிலிருந்து, பழிவாங்குதலிலிருந்து, எதிர்த்தாக்குலிலிருந்து அல்லது மிரட்டுதலிலிருந்து பாதுகாப்பு அல்லது அத்தகைய நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளுக்கு சமுகமளிப்பதற்கும் மற்றும் அவற்றில் பங்குபற்றுவதற்கும் உதவி தேவைப்படுகின்றது என நம்புவதற்கு நியாயமான காரணங்களைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக விடயத்திற்கேற்ப அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு அத்தகைய உதவியையும் பாதுகாப்பையும் வழங்கச் செய்வதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

*நீதிமன்றங்களினாலும் ஆணைக்குழுக்களினாலும் பாதுகாப்பு விதித்துரைக்கப்படுதல்.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆணைக்குழு குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு வழங்கப்படக்கூடிய பாதுகாப்பு மற்றும் உதவியானது, சம்பந்தப்பட்ட தவறுக்கு சந்தேகிக்கப்பட்டவரான அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரான ஆளின் உரிமைகளுக்கும் உரித்துடைமைகளுக்கும் ஏதேனும் பங்கத்தை ஏற்படுத்துதலோ அல்லது விடயத்திற்கேற்ப, இயைபான குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் அடிப்படை உரிமையில் தலையிடுதலையோ அல்லது மனித உரிமைகளை மீறுதலையோ ஏற்படுத்துதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படக்கூடிய பாதுகாப்பும் உதவியும் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம் :-

(அ) சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அத்துடன் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவர்களி

னதும் சிறுவர் சாட்சிகளினதும் அதிசிறந்த நலன்களை உறுதிப்படுத்துவதற்கும் விசேட வழிமுறைகளைக் கையாளுதல் ;

(ஆ) நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகள் முழுவதையும் அல்லது அதன் பாகத்தை இரகசியமாக நடத்துதல் ;

(இ) ஆணைக்குழு சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரை அல்லது சாட்சியை விளக்கம் அல்லது விசாரணை நடைபெறும் இடத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவரைப் பார்ப்பதன் மூலம் அநாவசியமாக தொல்லைப்படுத்தப்படுவதிலிருந்து, அச்சுறுத்தப்படுவதிலிருந்து பலவந்தப்படுத்தப்படுவதிலிருந்து அல்லது வன்முறைக்குட்படுத்தப்படுவதிலிருந்து அல்லது செல்வாக்கிற்குட்படுத்தப்படுவதிலிருந்து தடுப்பதற்கு அவசியமான வழிமுறைகளைக் கையாளுதல் ;

(ஈ) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட வரின் அல்லது சாட்சியின் ஆளடையாளமும், அவர் தொடர்பான தகவலின் பின்னணியும் வெளியிடப்படுவதனைத் தடைசெய்தல் ; அத்துடன்

(உ) அத்தகைய, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட வரின் அல்லது சாட்சியின் ஆளடையாளமும் அவரின் முழுச் சாட்சியமும் அல்லது அதன் ஏதேனும் பாகமும் சம்பந்தப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவரையும் அவரது சட்டப் பிரதிநிதியையும் தவிர்ந்த வேறு ஆட்களுக்கு வெளியிடப்படுவதைத் தடுப்பதற்குத் தோதான வழிமுறைகளைக் கையாளுதல், கையாளப்படும் வழிமுறைகள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஆளடை

யாளம் தொடர்பிலான தகவலை வெளியிடுவதிலிருந்து ஒலிபரப்புவதிலிருந்து, ஒளிபரப்புவதிலிருந்து அல்லது வேறுவகையில் பரப்புவதிலிருந்து ஊடக நிறுவனங் களையும், ஊடக ஆளணியினரையும் பணிக்கும் தத்து வத்தை உள்ளடக்குதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒரு நீதிமன்றம் அல்லது ஒரு ஆணைக்குழு அதன்பொருட்டு வழங்கப்பட்ட அறிவிப்பொன்றின் மூலம் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு அதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட பாதுகாப்பை வழங்குமாறு, அதிகாரசபைக்கு அல்லது பிரிவுக்கு வேண்டுகோள் விடுக்கலாம். அத்தகைய வேண்டுகோளொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் அவசியமான எவையேனும் விசாரணைகளை நடத்தியபின்னர் அத்தகைய பாதுகாப்பை வழங்குவதற்கான தேவை நன்கு நிலைநாட்டப்பட்டது என அது கருதுகின்றவிடத்து, சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு கோரப்பட்ட பாதுகாப்பை வழங்குவதற்கு அவசியமான எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்வது, விடத்திற்கேற்ப அதிகார சபையின் அல்லது பிரிவின் கடமையாதல் வேண்டும்.

*சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரிகளாலும் பகிரங்க அலுவலர்களாலும் வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு.*

**26**. ஏதேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளுக்கு சமுகமளித்து அதில் பங்குபற்றுகையில் ஏதேனும் சாத்தியமுள்ள தீங்கு, அச்சுறுத்துதல், பழிவாங்குதல், எதிர்த்தாக்குதல் அல்லது மிரட்டுதல் எதிலுமிருந்து குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொரு வருக்கு உதவி அல்லது பாதுகாப்பு தேவைப்படுகின்றது என நம்புவதற்கு நியாயமான ஏதுவையுடைய, சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரி ஒருவர் அலலது பகிரங்க அலுவலர் அதன் பயன்பாட் டிற்கு உடனடியாக அதிகாரசபைக்கும் பிரிவுக்கும் தொடர்பாடல் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

பாதுகாப்பையும் உதவியையும் பெறுகின்ற குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவர் களினதும் சாட்சிகளினதும் கடமைகள்.

**27.** *(1)* இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் உதவி அல்லது பாதுகாப்பு கிடைக்கப்பெற்ற குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி எவரும் –

(அ) வழங்கப்பட்ட அத்தகைய உதவியை அல்லது பாதுகாப்பை துஷ்பிரயோகம் செய்தலாகாது ;

(ஆ) ஏதேனும் புலனாய்வு முகவராண்மைக்கு ஒரு நீதிமன்றத்திற்கு அல்லது ஒரு ஆணைக்குழுவிற்கு பொய்த் தகவலை அல்லது சாட்சியத்தை வழங்குதலாகாது ; அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, சம்பந்தப்பட்ட உதவியை அல்லது பாதுகாப்பை வழங்கிய அதிகாரசபையுடன், பிரிவுடன் அல்லது ஆணைக்குழுவுடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் நியதிகளுக்கு முரணாகச் செயற்படுதலாகாது.

*(2)* குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் அல்லது சாட்சியொருவர் *(1)* ஆம் உட்பிரிவிற்கு முரணாக செயற்படுகின்ற விடத்து, அத்தகைய குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு இச்சட்டத்தின்கீழ் உதவியை அல்லது பாதுகாப்பை வழங்குகின்ற எவரேனும் அலுவலர் அல்லது ஏதேனும் அதிகாரசபை அத்தகைய குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது சாட்சிக்கு வழங்கப்படுகின்ற உதவியை அல்லது பாதுகாப்பை நிறுத்துதல் வேண்டும்.

## பாகம் VII

### நட்டஈடு

நட்டஈடு.

**28.** *(1)* நீதித்துறைச் சட்டம் மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவை சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒவ்வொரு மேல்நீதிமன்றமும் நீதிவான் நீதிமன்றமும் அத்தகைய நீதிமன்றத்தினால் ஆளொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்

மீது, எத்தவறு தொடர்பில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ, அத்தவறு தொடர்பில் அத்தகைய ஆள் மீது சுமத்தப்படக்கூடிய ஏதேனும் தண்டனை வலுவளித்தலிற்கு மேலதிகமாக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளை -

(அ) (i) நட்டஈடாக ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்று சம்பந்தப்பட்ட குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவருக்குச் செலுத்தப்படுவதற்கென ; அல்லது

(ii) அந்தத் தவறுக்காகச் செலுத்தக்கூடிய அதிகபட்ச குற்றப்பணத்தின் இருபது சதவீதத்தை விஞ்சாத தான பணத்தொகையொன்றை ; அல்லது

(ஆ) அத்தகைய நட்டஈடு அத்துடன் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட பணத்தொகை ஆகிய இரண்டையும்,

நீதிமன்றத்திற்குச் செலுத்துமாறு கட்டளையிடலாம்.

(2) உட்பிரிவு (1) இன் (அ) என்னும் பந்தியின் உட்பந்தி (i) இன்கீழ் விதிக்கப்படக்கூடிய நட்டஈட்டுத் தொகை மீதான தீர்மான மொன்றை அடைவதற்கு முன்னர் மேல் நீதிமன்றம் அல்லது நீதிவான் நீதிமன்றம் -

(அ) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் எந்தக் குற்றச் செயலிற்கு குற்றம் சாட்டப்பட்டாரோ அந்தக் குற்றச்செயலுக்கு உட்பட்டதன் விளைவொன்றாக குற்றச்செயலுக்கு பலியாக்கப்பட்டவர் பாதிக்கப்படக்கூடிய சேதம், இழப்பு அல்லது தீங்கின் தன்மையினையும் அளவினையும் நீதிமன்றம் தீர்மானிப்பதற்கு இயலச் செய்யக்கூடிய, பலியாக்கப்பட்டவரைப் பரிசோதனை செய்துள்ள அரசாங்க மருத்துவ அலுவலரின் அறிக்கை உள்ளடங்கலாக, குற்றச்செயலுக்கு பலியாக்கப்பட்டவர் தொடர்பான எல்லா இயைபான தகவலையும் ;

(ஆ) குற்றச் செயலிற்கு பலியாக்கப்பட்டவரால் அல்லது அவரது சட்டப்பிரதிநிதியால் அத்தகைய குற்றச்செயலிற்கு பலியாக்கப்பட்டவர் மீதான தாக்கம் தொடர்பிலான முறைப்பாடுகளை அல்லது முன்வைத் தல்களை ; அத்துடன்

(இ) ஏதேனும் நீதிமன்றத்தால், அதிகாரசபையால் அத்த கைய குற்றச்செயலிற்கு பலியாக்கப்பட்டவருக்கு ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கக்கூடிய அல்லது வேறுவகையில் ஏதேனும் வேறு மூலத்திலிருந்து அவரால் பெறப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் நட்டஈடு தொடர்பிலான தகவலை,

கோருதலும், பரிசோதனை செய்தலும் மற்றும் கருத்திற்கொள்ளு தலும் வேண்டும்.

(3) விடயத்திற்கேற்றவாறு மேல்நீதிமன்றத்தின் தலைமை தாங்கும் நீதிபதி அல்லது நீதிவான் -

(அ) உட்பிரிவு (1) இன் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின்கீழ் செலுத்தப்பட்ட பணத்தொகையை விடயத்திற்கேற்ப சம்பந்தப்பட்ட குற்றச் செயலிற்குப் பலியாக்கப்பட்டவருக்கு அல்லது அவரது தங்கிவாழ் வோருக்கு அல்லது அவரது மிக நெருங்கிய உறவின ருக்கு அனுப்புதல் வேண்டும் ;

(ஆ) உட்பிரிவு (1) இன் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின்கீழ் செலுத்தப்பட்ட பணத்தொகையை இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டும் ;

(இ) உட்பிரிவு (1) இன் (அ) என்னும் பந்தியின்கீழ் செலுத்தப் பட்ட பணத்தொகையை இவ்வுட்பிரிவின் பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றில் ஏற்பாடு செய்யப்பட்டதற்கு நேரொத்த முறையில் அனுப்புதல் வேண்டும்.

(4) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட ஏதேனும் கொடுப்பனவைச் செய்யத்தவறும் பட்சத்தில் மேல் நிதிமன்றத்தின் தலைமைதாங்கும் நீதிபதி அல்லது நீதிவான் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவர் அத்தகைய பணத்தொகையின் கொடுப்பனவைச் செய்யாமைக்குப் பதிலாக தேவைப்படுத்தப்படவேண்டிய தவணை தவறியமைக்கான மறியற்றண்டனையைத் தீர்மானித்து விளம்புதல் வேண்டும்.

ஆயின், மேல் நீதிமன்றத்தின் தலைமைதாங்கும் நீதிபதி அல்லது நீதிவான் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் சுமத்தப்பட்ட கொடுப்பனவை செய்வதற்கு அவசியமான நிதி வளங்களைக் கொண்டிருக்கவில்லையென விசாரணையில் திருப்திப்பட்டிருக்கின்றவிடத்து, விடயத்திற் கேற்ப தலைமைதாங்கும் நீதிபதி அல்லது நீதிவான் சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தக் கட்டளையொன்றினை செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகையவொரு கட்டளை செய்யப்படுகின்றவிடத்து, 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தச் சட்டத்தில் அடங்கியுள்ள சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தக் கட்டளை தொடர்பான ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், அக்கட்டளை தொடர்பாக ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின் (1) (அ) (i) என்னும் உட்பிரிவின் கீழ் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரொருவரால் நட்டஈடு பெறுதலானது அத்தகைய குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் ஏதேனும் குடியியல் நடவடிக்கைகளில் சேதங்களைக் கோருவதிலிருந்து அத்தகைய பலியாக்கப்பட்டவரைப் பங்கப்படுத்துதலாகாது. ஆயினும், கிடைக்கப்படக்கூடிய சேதங்களுக்கான அளவைத் தீர்மானிக்கையில் அத்தகைய குடியியல் நீதிமன்றமானது, இப்பிரிவின் (1) (அ) (i) என்னும் உட்பிரிவின்கீழ் அத்தகைய குற்றச்செயலிற்குப் பலியாக்கப்பட்டவரால் பெறப்பட்ட நட்டஈட்டினை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

*குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியம்.*

**29.** *(1)* (இதனகத்துப்பின்னர் "பாதுகாப்பு நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப் பட்டோரினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்பு நிதியம் என அழைக்கப்படுகின்ற நிதியமொன்று இருத்தல் வேண்டும்.

*(2)* பாதுகாப்பு நிதியம், சபையினால் நிருவகிக்கப்படுதலும் முகாமை செய்யப்படுதலும் வேண்டும்.

*(3)* பாதுகாப்பு நிதியத்தினுள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) அத்தகைய நிதியத்திற்காக பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) எவையேனும் உள்ளூர் அல்லது வெளிநாட்டு மூலங்களிலிருந்து ஏதேனும் அளிப்பு, நன்கொடை, உதவு தொகை, இறுதிவிருப்பாவணக் கொடை மற்றும் மானியக்கொடை என்ற வகையாகப் பாதுகாப்பு நிதியத்திற்கு அனுப்புவதற்காக அதிகாரசபையினால் பெறக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் (1) (அ) (ii) என்னும் உட்பிரிவின் கீழ் நீதிமன்றமொன்றினால் அனுப்பப் பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

*(4)* பின்வரும் கொடுப்பனவிற்காகச் சபையினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் பாதுகாப்பு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) உடல்ரீதியான அல்லது உளரீதியான ஏதேனும் ஊறு அல்லது ஆதனத்திற்கான ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்காக குற்றச்செயலிற்குப் பலியாக்கப்பட் டோருக்கான நட்டஈடு ;

(ஆ) குற்றச்செயலிற்குப் பலியாக்கப்பட்டவராக இருப்பதன் விளைவாக இறந்துள்ள அல்லது உடல்ரீதியில் அல்லது உளரீதியில் தகுதியற்றவராக ஆக்கப்பட்ட குற்றச்செயலிற்குப் பலியாக்கப்பட்டவரொருவரில் தங்கியிருக்கின்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் மற்றும் தங்கியிருக்கின்ற மிக நெருங்கிய உறவினர்களுக்கும் மற்றும் வேறு தங்கிவாழ்வோருக்குமான நட்டஈடு .

(5) பணிப்பாளர் தலைமையதிபதி பாதுகாப்பு நிதியத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவர், அத்தகைய நிதியத்தின் வருமானமும் செலவினமும் மற்றும் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தலும் வேண்டும்.

(6) பாதுகாப்பு நிதியத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

**30.** (1) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவர் - நட்டஈடு மற்றும் உதவிக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்தாதல்.

(அ) குற்றச்செயலிற்குப் பலியாக்கப்பட்டவராக இருப்பதன் விளைவாகத் துன்புற்ற ஏதேனும் உடல் அல்லது உளரீதியான ஊறுபாடு அல்லது ஏற்பட்ட பாதிப்பு மற்றும் ஆதனத்திற்கான ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பான நட்டஈட்டுக் கொடுப்பனவு ; அத்துடன்

(ஆ) குற்றச்செயலிற்குப் பலியாக்கப்பட்டவராக இருப்பதன் விளைவாக ஏதேனும் உடல், உளரீதியான ஊறுபாடு அல்லது அத்தகைய பலியாக்கப்பட்டவரால் துன்புற்ற பாதிப்புத் தொடர்பில் மருத்துவ சிகிச்சை அல்லது புனர்வாழ்வு அல்லது கலந்தாலோசனை சேவையை பெறுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பணக்கொடுப் பனவு,

என்பவற்றிற்காக அதிகாரசபைக்கு விண்ணப்பிப்பதற்கு உரித்து டையவராதல் வேண்டும்.

(2) அதிகாரசபை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்ப மொன்றை செய்கின்ற குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட வருக்குச் செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகையை தீர்மானிக்கையில் 28 ஆம் பிரிவின்கீழ் நட்டஈடாக அத்தகைய குற்றச் செயலிற்குப் பலியாக்கப்பட்டவரால் ஏற்கனவே பெறப்பட்ட அல்லது ஏதேனும் நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட கட்டளையொன் றின்மேல் அவரால் பெறப்பட்ட அல்லது ஏதேனும் வேறு மூலத்திலிருந்து வேறுவகையில் அவரால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகையைக் கவனத்திற்கு எடுத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ்க் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவரொருவருக்கு ஏதேனும் நட்டஈடு அல்லது செலவினம், அத்தகைய குற்றச் செயலிற்குப் பலியாக்கப்பட்டவருக்கு, நட்ட ஈட்டுக் கொடுப்பனவாக நீதிமன்றமொன்றினால் செய்யப்படும் தீர்ப்பொன்றிற்கு முன்னராகச் செலுத்தப்படுகின்றவிடத்து, (1)ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையினால் செய்யப்பட்ட கொடுப்பனவு நீதிமன்றமொன்றினால் நட்டஈட்டுத் தீர்ப்பொன்று முடிவுறாதிருக்கையில் அத்தகைய குற்றச் செயலினால் பாதிக்கப்பட்டவருக்கு அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரண மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(4)* இப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின்கீழ் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவருக்கு நட்டஈடு அல்லது ஏதேனும் செலவினம் அளித்தலில், அதுசார்பாக ஆக்கப்படக்கூடியவாறான ஏதேனும் ஒழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

## பாகம் VIII

### கட்புல-செவிப்புல இணைப்பின் ஊடாக சாட்சியமளித்தல்

*சமகால கட்புல செவிப்புல இணைப்பு ஊடான சாட்சியத்தை அல்லது கூற்றைப் பதிவு செய்தல்.*

**31.** *(1)* வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவிருப்பது எவ்வாறிருப்பினும், ஆளடையாள அணிவகுப்பொன்றை, சுருக்கமுறையற்ற விசாரணையொன்றை அல்லது வேறு ஏதேனும் விசாரணையொன்றை அல்லது விளக்கமொன்றை நடாத்துகின்ற நீதிமன்றமொன்று அல்லது புலனாய்வொன்றை அல்லது விசாரணையொன்றை நடாத்துகின்ற ஆணைக்குழுவொன்று அல்லது புலனாய்வொன்றை நடாத்துகின்ற சட்டத்தை வலுவுக்கிடும் ஏதேனும் அதிகாரசபை நீதியின் சிறந்த நலனுக்கானதாயும் அத்துடன் :-

*(அ)* குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது சாட்சியொருவருக்கு வழங்கப்படவுள்ள பாதுகாப்பு வழிமுறையொன்றாக ; அல்லது

*(ஆ)* உசிதத்தின் ஏதுக்களின் மீது,

அவசியமானதெனவும் காணப்படின் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சிறந்த நலனைக் கருத்திற்கொண்டு அத்தகைய குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி விடயத்திற்கேற்ப அத்தகைய நீதிமன்றத்தின், ஆணைக்குழுவின் அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபையின் முன்னிலையில் நேரில் வருகை தராமல் அத்த

கைய ஆள் எந்த இடத்திலிருந்து சாட்சியமளிக்கின்றாரோ அல்லது கூற்றினைச் செய்கின்றாரோ அந்த இடத்திலிருந்து இலங்கைக்குள்ளிருக்கும் வேறு ஏதேனும் இடத்திலிருந்து நீதிமன்றத்திற்கும் அல்லது ஆணைக்குழுவுக்கும் அல்லது சட்டத்ததை வலுவுக்கிடும் அதிகாரசபைக்கும் அந்த வேறு ஏதேனும் அமைவிடத்திற்கும் (இதனகத்துப்பின்னர் "சேய்மை அமைவிடம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இடையில் சமகால அல்லது அண்மித்த சமகால செவிப்புல - கட்புல இணைப்பைத் தாபிக்கக்கூடிய தொழில்நுட்ப வழிமுறைகள் ஊடாக அத்தகைய சான்றுரையை அல்லது கூற்றைப் பெறுவதன் மூலம் அத்தகைய குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஏதேனும் சாட்சியத்தை அல்லது கூற்றொன்றை ஒலிப்பதிவு செய்யலாம்.

(2) 32 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபை (1)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி சான்றுறுதியை அல்லது கூற்றை ஒலிவாங்குவதற்கு அல்லது ஒலிப்பதிவு செய்வதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட செவிப்புல - கட்புல இணைப்பு துல்லியமாகவும் நம்பகத்தன்மையுடையதாகவும் உள்ளதெனவும் எந்த சேய்மை அமைவிடத்திலிருந்து குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி சாட்சியமளிக்க அல்லது கூற்றினைச் செய்ய விழைகின்றாரோ அந்த இடத்தில் சம்பந்தப் பட்ட நீதிமன்றத்தால், ஆணைக்குழுவால் அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபையால் குறித்தொதுக்கப்பட்ட நீதித்துறை அலுவலர் ஒருவர் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவர் சமுகமாயிருக்கின்றார் என்பதனையுமிட்டுத் தன்னை திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் குறித்தொதுக்கப்பட்ட சேய்மை அமைவிடத்திலிருந்து குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட வரின் அல்லது சாட்சியின் சான்றுரையை அல்லது கூற்றின்

ஒலிவாங்கலை அல்லது ஒலிப்பதிவைத் தொடங்குவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபை சட்டத்துறைத் தலைமை யதிபதியினதும் அமைச்சரினதும் அமைச்சுச் செயலாளரினதும் விதப்புரையின் மீதும் 32 ஆம் ஏற்பாடுகளுக்கமையவும் இயை பான கட்புல - செவிப்புல இணைப்பைத் தாபிப்பதற்கும் அதன் செயற்பாட்டிற்கும் அவசியமான நிதி மற்றும் ஏனைய வளங்களை அதிகாரசபையிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக “நீதிமன்றம்” என்பது, எந்த நீதிமன்றத்தின் முன்னர் எவையேனும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் நடாத்தப்படுகின்றனவோ அந்தவொரு நீதிமன்றம் என்று பொருள்படும்.

குறித்தசில சூழ்நிலைகளில் அதிகாரசபை 31 ஆம் பிரிவின்கீழ் உதவி வழங்குமாறு தேவைப் படுத்தப் படமாட்டாது.

**32.** (1) (அ) முப்பத்தோராம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியும் மற்றும் அமைச்சரின் அமைச்சுச் செயலாளரும் -

(i) சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப் பட்டவரின் அல்லது சாட்சியின் சாட்சியத்தை அல்லது கூற்றை 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் இனங்காணப்பட்ட சேய்மை அமைவிடத்திலிருந்து பெறுவது தேசிய பாதுகாப்பு உட்பட தேசிய நலனுக் கானதல்ல என ;

(ii) 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் இனம்காணப் பட்ட சேய்மை அமைவிடத்திலிருந்து இயைபான குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சான்றுரையை அல்லது கூற்றைப் பெறுவது சாத்தியமற்றது என,

விதப்புரை செய்யுமிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி அவரது அபிப்பிராயத்தை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு, ஆணைக் குழுவுக்கு அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபைக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(ஆ) வேறு ஏதேனும் தோதான மாற்று சேய்மை அமைவிடத்திலிருந்து அத்தகைய சான்றுரையை அல்லது கூற்றைப் பெறுவது நீதியின் நலனுக்கானதாகும் என சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி அத்தகைய மாற்று அமைவிடத்தை விடயத்திற்கேற்ப நீதிமன்றத்திற்கு, ஆணைக்குழுவுக்கு அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபைக்கு விதப்புரை செய்யலாம்.

(2) (அ) குறிப்பிட்டவொரு சேய்மை அமைவிடத்திலிருந்து எவரேனும் குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சாட்சியத்தை ஒலிப்பதிவு செய்தல் அல்லது கூற்றைப் பெறுதல் தோதானதல்ல என சட்டத்துறைத் தலைமையதிபதி அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தியுள்ள விடத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபை இயைபான குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது கூற்றை சேய்மை அமைவிடத்திலிருந்து சமகால செவிபுல- கட்புல இணைப்பின் ஊடாக ஒலிவாங்குதலையும் ஒலிப்பதிவு செய்வதனையும் மேற்கொள்ள முனைதலாகாது என்பதுடன் இதன் விளைவாக அதிகாரசபை 31 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றத்திற்கு, ஆணைக்குழுவுக்கு அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபைக்கு அவசியமான உதவி மற்றும் நிதி அல்லது வேறு வளங்கள் என்பவற்றையும் வழங்குமாறு தேவைப்படுத்தப் படுதலாகாது.

(ஆ) நீதின்றம், ஆணைக்குழு அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபை சேய்மை அமைவிடத்தை (1) ஆம் உட்பிரிவின் கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியால் விதப்புரை செய்யப்பட்ட அமைவிடத்திற்கு மாற்றத் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபை, 31 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் உதவியைப் பெற முற்படலாம்.

சான்றுரையை அல்லது கூற்றைப் பதிவு செய்யும் நடவடிக்கை முறை.

**33.** (1) முப்பத்தோராம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் குற்றச் செயலுக்குப் பலியான ஒருவரின் அல்லது சாட்சியொருவரின் சான்றை அல்லது கூற்றைப் பதிவுசெய்ய முன்னும் நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு ஆரம்பத்தில் கூற்றைப் பதிவுசெய்வித் தலும் அத்துடன் அத்தகைய சான்றுரையை அல்லது கூற்றை சட்டத்துறைத் தலைமையதிபதிக்கும், குற்றச்செயலுக்குப் பலியானவருக்கும் அல்லது சாட்சிக்கும் அத்துடன் எந்த ஆளின் சட்ட உரிமைகள் அத்தகைய சான்றுரையால் அல்லது கூற்றால் பாதிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளுக்கும் அல்லது அவரது பிரதிநிதிக்கும் சேர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், சம்பந்தப்பட்ட குற்றச் செயலுக்குப் பலியானவரின் அல்லது சாட்சியின் சான்றுரையைப் பதிவு செய்வதற்குத் திட்டமிடப்பட்ட தேதியைப் பற்றி சம்பந்தப்பட்ட அனைத்துத் திறத்தவர்களுக்கும் முப்பது நாட்களுக்குக் குறையாத அறிவித்தலை வழங்குதலும் வேண்டும்.

(2) நீதிமுறை அலுவலர் அல்லது 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் சம்பந்தப்பட்ட எந்த சேய்மை அமைவிடத்தி லிருந்து குற்றச்செயலுக்குப் பலியானவர் அல்லது சாட்சி சான்று ரையளிக்க அல்லது கூற்றினைச் செய்ய உத்தேசிக்கின்றாரோ அந்த சேய்மை அமைவிடத்தில் சமுகமாயிருப்பதற்கு ஒரு நீதிமன்றத்தால் அல்லது ஆணைக்குழுவால் குறித்தொதுக் கப்பட்ட ஆள் அவசியமானவிடத்து சம்பந்தப்பட்ட குற்றச் செயலுக்குப் பலியானவரை அல்லது சாட்சியை நேர்காண்பதன் மூலம் அவரது அவதானிப்புரைகளைச் செய்யுமாறும் நீதிமன்றத் திற்கு அல்லது ஆணைக்குழுவுக்கு விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய விடயங்களைக் கொண்டிருக்கின்ற அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறும் தேவைப்படுத்தப்படுதல் வேண் டும்.

(3) நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு (2) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையையும் அறிக்கையில் உள்ளடக்கப் பட்டவைகளையும் மற்றும் அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது

ஆணைக்குழுவின் முன்னிலையிலுள்ள வேறு ஏதேனும் இயைபான விடயத்தையும் பரிசீலனை செய்ததன் மீது அத்தகைய சமகால கட்புல - செவிப்புல இணைப்பின் ஊடாக அளிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட சாட்சியத்தை அல்லது கூற்றைப் பெறுவதும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட அத்தகைய சாட்சியத்தின் அல்லது கூற்றின் ஏல்தகவும் பயன்பாடும் நீதியின் சிறந்த நலனுக்கானதாகுமா என்ற முடிவுக்கு வருதல் வேண்டும்.

கட்புல - செவிப்புல இணைப்பின் ஊடாக சாட்சியத்தை ஒலிவாங்குதல் அல்லது ஒலிப்பதிவு செய்தல் இப்பாகத்திற்கு இணங்கியதாக இருத்தல்.

**34**. நீதிமன்றம், ஆணைக்குழு அல்லது சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரசபை இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளால் அதற்கென விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க தவிர சமகால கட்புல - செவிப்புல இணைப்பின் ஊடாக எவரேனும் குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சான்றுரையை அல்லது கூற்றை ஒலிவாங்குதலோ அல்லது ஒலிப்பதிவு செய்தலோ ஆகாது.

## பாகம் IX

### பொது

கடமைகள் முதலியற்றை நிறைவேற்றுதலில் தலையீடு.

**35**. இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தத்துவத்தை, பணிப்பை அல்லது கடமையைப் பிரயோகிக்கையில், நிறைவேற்றுகையில் புரிகையில் சட்டபூர்வமான அதிகாரமின்றி ஏதேனும் நீதிமன்றத்தில், ஆணைக்குழுவில், அதிகாரசபையில், சபையில், பிரிவில் அல்லது எவரேனும் பகிரங்க அல்லது நீதித்துறை அலுவலருடன் தலையிடுகின்ற அல்லது அதனை அல்லது அவரைத் தடுக்கின்ற அல்லது தலையிட அல்லது தடுக்க எத்தனிக்கின்ற ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கும் இருபதினாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

**இரகசியம் பேணுதல்.**

**36.** *(1)* இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்திற்கு அவசியமானதாக வந்தாலன்றி ஆளெவரும் ஏதேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கைகளில் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி இச்சட்டத்தின்கீழ் உதவியையோ அல்லது பாதுகாப்பையோ பெறுகின்றாரா அல்லது பெற்றுள்ளாரா எனத் தெரிவிப்பதற்குக் கட்டாயப்படுத்தப்படுதல் ஆகாது.

*(2)* ஆளெவரும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் அல்லது வேறு ஏதேனும் சட்ட ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகும் நோக்கத்திற்காக தவிர வேறுவகையாக குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி இச்சட்டத்தின் கீழ் உதவியையோ அல்லது பாதுகாப்பையோ பெறுகின்றாரோ அல்லது பெற்றுள்ளாரா என்பதனை வேறு எவரேனும் ஆளுக்கு வெளிவிடுதல் ஆகாது.

**சாட்சியமொன்றின் நம்பகத் தன்மையை மதிப்பீடு செய்தல்.**

**37.** குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவரால் அல்லது சாட்சியொருவரால் வழங்கப்பட்ட சாட்சியமொன்றின் நம்பகத்தன்மையை மதிப்பீடு செய்தலில் குற்றச் செயலுக்குப் பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் உதவியை அல்லது பாதுகாப்பைப் பெற்றுள்ளாரா என்ற நிகழ்வு மூலப்பிரமாணமொன்றாக இருத்தல் ஆகாது.

**இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏனைய சட்டங்களை விட மேலோங்கி நிற்றல்.**

**38.** எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தினதும் எழுத்திலான அத்தகைய வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**கணக்குகளின் கணக்காய்வுகள்.**

**39.** *(1)* பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை

யின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் நிதியத்தினதும், பாதுகாப்பு நிதியத்தினதும் கணக்குகளின் கணக்காய்வுக்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 38ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் (1) உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார்ந்த கட்டுப்பாட்டுக்கும் கணக்குகளுக்கும், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

**40.** (1) அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும், அந்த அலுவலர் எந்த அமைச்சினால் அல்லது அமைச்சின்கீழ் ஊழியத்திற்கமர்த்தப்பட்டுள்ளாரோ அந்த அமைச்சின் செயலாளரினதும் மற்றும் பகிரங்க சேவை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மத்துடன் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலத்திற்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்ற விடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்ற விடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*(4)* குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்கு அரசாங்கத்திற்குச் சேவைபுரிய உடன்படுவதாக அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளவரான ஆளெவரையும் அதிகாரசபையானது ஊழியத்தில் அமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினால் அதிகாரசபைக்குப் புரியப்பட்ட சேவைக்காலப் பகுதியானது அத்தகைய ஒப்பந்தத்தின்கீழ் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அவ்வாளினால் அரசாங்கத்திற்குப் புரியப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் அலுவலர் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

***41.*** சபையின் உறுப்பினர்கள், பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் அதிகாரசபையின் வேறு எல்லா அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள், ஆலோசகர்கள் மற்றும் அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட மதியுரைஞர்கள் முறையே தண்டனைச் சட்டக் கோவையினதும் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தினதும் கருத்தெல்லைக்குட்படவும் அத்துடன் அவற்றின் நோக்கங்களுக்காகவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அதிகாரசபை இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணையிடப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.*

***42.*** அதிகாரசபை இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணையிடப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*ஆட்களின் குழுக்களுக்கெதிரான வழக்கு.*

***43.*** இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆட்களின் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது -

(அ) அந்த ஆட்களின் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருப்பின் அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர், முகாமையாளர், பிரதம நிறைவேற்று அலுவலர் அத்துடன் செயலாளர் ஒவ்வொருவரும் ;

(ஆ) அந்த ஆட்களின் குழு குழுமமொன்றாயின் அக்குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும் அத்துடன் அதன் பிரதம நிறைவேற்று அலுவலரும் ;

(இ) அந்த ஆட்களின் குழு கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாயின் அத்தகைய குழுமத்தின் உறுப்பினரொருவராகவுள்ள தனியாள் ஒவ்வொருவரும் அத்துடன் அதன் பிரதம நிறைவேற்று அலுவலரும் ; அத்துடன்

(ஈ) அந்த ஆட்களின் குழு உள்ளூரதிகார சபையொன்றாயின் அல்லது அத்தகைய உள்ளூரதிகார சபையின் சார்பில் செயற்படுதற்கு உள்ளூரதிகாரசபை தொடர்பிலான ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபையாயின் அத்தகைய உள்ளூரதிகார சபையின் தவிசாளரும்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் விடயத்திற்கேற்ப ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர், பிரதம நிறைவேற்று அலுவலர் அத்துடன் செயலாளர் அல்லது ஏதேனும் குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும் மற்றும் பிரதம நிறைவேற்று அலுவலர் அத்துடன் கூட்டிணைக்கப்படாத குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அத்துடன் பிரதம நிறைவேற்று அலுவலர் அல்லாத உள்ளூரதிகார சபையொன்றின் தவிசாளர், அத்தகைய தவறு அவரது அறிவுக்கு எட்டாமலேயே புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறு புரியப்படு வதைத் தடுப்பதற்கு அவர் உரிய எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தார் என நீதிமன்றம் திருப்தியுறும் வகையில் எண்பித்தால் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலாகாது.

**44.** (1) அமைச்சர் அதிகாரசபையின் விதப்புரையின் மீது மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயன்கொடுப்பதற்கு அவசியமாகின்றவாறான அத்தகைய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். *ஒழுங்கு விதிகள்.*

(2) அமைச்சரினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட எல்லா ஒழுங்குவிதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியொன்று இல்லாதொழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப் படுதல் வேண்டும்.

**45.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**46.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத் தினாலன்றி - *பொருள் கோடல்.*

"குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவர்" மற்றும் "சிறுவர் சாட்சி" என்பன முறையே பதினெட்டு வயதிற்குக் குறைவான வயதினையுடைய ஆளொருவ ராகவும் மற்றும் ஒன்றில் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவராகவோ அல்லது சாட்சியொரு வராகவோ இருக்கின்றவருமான ஆளொருவர் என்று பொருள்படும் ;

"குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டம் எனப் பொருள்படும்.

"ஆணைக்குழு" என்பது -

(அ) (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தினால் நியமிக் கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்று ;

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழு வொன்று ;

(இ) 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் சட்டத்தின் சார்த்துரைகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்து ரைகளை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு ; அத்துடன்

(ஈ) *1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,*

என்று பொருள்படும் ;

*"சட்டத்தை வலுவுக்கிடும் அதிகாரி" என்பது, தவறொன்று புரிதலையிட்டு புலன்விசாரணை செய்வதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நியதிச்சட்ட அதிகாரி, பகிரங்க அலுவலர் அல்லது ஏதேனும் வேறு ஆள் என்று பொருள்படும் ;*

*"நீதித்துறைச் சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம் என்று பொருள்படும் ;*

*"குற்றச்செயலிற்குப் பலியாக்கப்பட்டவர்" என்பது, ஏதேனும் சட்டத்தின் கீழ்த் தவறொன்றாக அமையும் செயலொன்றின் அல்லது செய்யாமையின் விளைவாக உடல்ரீதியாகவாயினுஞ்சரி, உள, உணர்வு பொருளாதாரரீதியாவாயினுஞ்சரி ஏதேனும் ஊறுக்கு, தீங்கிற்கு, குறைபாட்டிற்கு அல்லது இயலாமைக்கு அல்லது அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமையொன்றின் தலையீடொன்றுக்கு அல்லது 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தில் (கு.அ.உ.ச.உ.) குறிப்பீடுசெய்யப்பட்ட மனித உரிமையொன்றின் மீறலுக்கு ஆளாகியுள்ள ஆளொருவர் என்று பொருள்படும் என்பதுடன், அத்தகைய ஆளிற்கு உதவுவதற்கான அல்லது தவறொன்று புரியப்படுவதனைத் தடுப்பதற்கான தலையீட்டின் விளைவொன்றாக கெடுதலுக்கு ஆளான ஆளொருவரையும் அத்துடன்*

குற்றச்செயலுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவரொருவரின் பெற்றோரையும் அல்லது பாதுகாவலரையும், குடும்பத்தின் எவரேனும் உறுப்பினரையும், அத்தகைய ஆளின் நெருங்கிய உறவினரையும், தங்கிவாழ்பவர் களையும் அத்துடன் அத்தகைய ஆளுக்கு பிரதானமான முக்கியத்துவம்வாய்ந்த வேறு எவரேனும் ஆளையும் உள்ளடக்கும் ;

"சாட்சி" என்பது -

(அ) சார்த்துரைக்கப்பட்ட தவறொன்றிற்கான புரிதல் அல்லது அடிப்படை உரிமையொன்றிற்கான தலையீடு அல்லது மனித உரிமை மீறல் தொடர்பில் எந்த ஆளினால் தகவல் வழங்கப்பட்டுள்ளதோ அல்லது எவரேனும் சட்டவலுவுக்கிடும் அலுவலருடன் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளதோ அத்தகைய தகவல் அல்லது முறைப்பாட்டின் அடிப்படைமீது புலன்விசாரணை அல்லது விசாரணையொன்று ஆரம்பித்திருக்கக் கூடிய, ஆரம்பித்துள்ள அல்லது ஆரம்பிக்கும் சாத்தியம்கொண்டதான தகவலை வழங்கியவரான அல்லது முறைப்பாட்டைச் செய்தவரான ;

(ஆ) சார்த்துரைக்கப்பட்ட தவறொன்றிற்கான புரிதல் அல்லது அடிப்படை உரிமைக்கான தலையீடு அல்லது மனித உரிமை மீறல் சட்டவலுவுக்கிடும் அதிகாரியொருவரினால் நடாத்தப்பட்ட புலன்விசாரணையொன்றின்போது அல்லது விசாரணையொன்றின்போது எந்தக் கருமங்கள் தொடர்பில் அத்தகைய ஆள் கேள்விக்குட்படுத்தப்பட்

டுள்ளாரோ அந்தக் கருமங்களைக்கொண்ட தகவலை வழங்கியுள்ளவரான அல்லது கூற்றொன்றைச் செய்துள்ளவரான ;

(இ) குற்றச்செயலிற்குப் பலியாக்கப்பட்டவரொருவரால் செய்யப்பட்ட முறைப்பாடொன்றிற்கு அல்லது தொடுக்கப்பட்ட ஏதேனும் சட்ட நடவடிக்கைக்கு ஆதரவாகச் சத்தியக்கடதாசியொன்றை வழங்கியுள்ளவரான அல்லது கூற்றொன்றைச் சமர்ப்பித்துள்ளவரான ;

(ஈ) ஆணைக்குழுவொன்றிற்கு தகவல் அல்லது ஏதேனும் தொடர்பாடலை வழங்கியுள்ளவரான ;

(உ) ஆளொருவருக்கு எதிரான ஏதேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கையில் அத்தகைய ஆளினால் சட்டவலுவுக்கிடும் அதிகாரிக்கு அல்லது ஆணைக்குழுவிற்கு செய்யப்பட்ட கூற்றொன்றின் அல்லது வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையின்மீது தாம் கூற்றொன்றைச் செய்யுமாறு அல்லது சாட்சியமளிக்குமாறு நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் அழைப்பாணை விட்டழைக்கப்பட வேண்டுமென நம்புவதற்குப் போதிய நியாயத்தைக் கொண்டுள்ளவரான ;

(ஊ) ஏதேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கையில் நீதிமன்றமொன்றின் அல்லது ஆணைக்குழுவொன்றின் முன்னர் கூற்றொன்றை செய்வதற்கு, சாட்சியமளிப்பதற்கு அல்லது ஏதேனும் ஆவணத்தை,

அறிக்கையை அல்லது விடயப்பொருளைச் சமர்ப்பிப்பதற்கு என அத்தகைய நீதிமன்றத்திலிருந்து அல்லது ஆணைக்குழுவிலிருந்து அழைப்பாணை விட்டழைக்கப்பட்டுள்ளவருமான ; அல்லது

(எ) சார்த்தப்பட்ட குற்றமொன்றிற்கான புரிதல் அல்லது அடிப்படை உரிமைக்கான தலையீடு அல்லது மனித உரிமைமீறல் பற்றி விசாரணைசெய்துள்ள பகிரங்க அலுவலரொருவராகவுள்ளவரான,

எவரேனும் ஆள் என்று பொருள்படும் என்பதுடன், குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டுள்ளவரையும், சிறுவர் சாட்சியின் பெற்றோரையும் அல்லது பாதுகாவலரையும், அத்தகைய சாட்சியின் குடும்ப உறுப்பினரொருவரையும் அல்லது தங்கிவாழ்வோரையும் அல்லது அத்தகைய ஆளுக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம்வாய்ந்த வேறு எவரேனும் ஆளையும், நிபுணத்துவமுடைய சாட்சியொருவரையும் மற்றும் சார்த்துரைக்கப்பட்ட குற்றமொன்றிற்கான புரிதல் அல்லது அடிப்படை உரிமைக்கான தலையீடு அல்லது மனித உரிமை மீறலில் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் சார்பில் நீதிமன்றமொன்றின் அல்லது ஆணைக்குழுவொன்றின் முன்னர் சாட்சியமளிப்பதற்கென அழைப்பாணை விட்டழைக்கப்பட்டுள்ளவருமான ஆளொருவரையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"எழுத்திலான தொடர்பால்" என்பது சாதாரண அல்லது பதிவு அஞ்சல்போன்ற எத்தன்மையதுமான ஏதேனும் ஊடகத்தில் தொலைநகல்மூலம் அத்துடன் இலத்திரனியல் அஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தையும் உள்ளடக்கும்.

**அட்டவணை** (பிரிவு 11 (3) )

1. ஆளொருவர் -

(அ) பாராளுமன்றத்தின், ஒரு மாகாண சபையின் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினராகவிருப்பின் அல்லது உறுப்பினராக வந்தால் ;

(ஆ) இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின் அல்லது இல்லாதொழி யின் ;

(இ) இலங்கையில் அல்லது வேறேதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ்ச் சித்தசுவாதீனமற்றவராகக் காணப் படின் அல்லது வெளிப்படுத்தப்படின் ; அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பிற்கு உட்பட்டவராயிருப்பின் அல்லது உட்பட்டவராயிருந்திருப்பின்,

சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது நியமன உறுப்பின ராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

2. சபையின் ஒவ்வோர் உறுப்பினரும் இறப்பின்மூலம், பதவிவிலகல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அவர் அகற்றபட்டிருந்தாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவரா தலும் வேண்டும் :

ஆயின், இறப்பின்மூலம், பதவிவிலகல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல்மூலம் பதவியை வறிதாக்கியுள்ள உறுப்பினரொருவரின் இடத்தில் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறா தெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

3. அவரது கடமையை புரிவதிலான துர்நடத்தைக்காக அல்லது அத்தகைய உறுப்பினர் மோசடி அல்லது நேர்மையின்மை தொடர்புடையதா யிருக்கின்ற தவறொன்றில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளவிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமன உறுப்பினரின் நியமனத்திற்குக் கலந்தா லோசனை செய்யத் தேவைப்படுத்தப்படுகின்ற ஆட்களுடனான கலந்தா லோசனையுடன் சபையின் அத்தகைய நியமன உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றலாம். அகற்றப்பட்ட நியமன உறுப்பினரொருவர் அத்தகைய கட்டளை யானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்தும் மற்றும் அதன் பின்னரும் பதவியை வகிக்காது ஒழிதல் வேண்டும்.

4. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அமைச்சருக்கு அப்பொருள்பட முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகலானது அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

5. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறப்பின்மூலம், பதவிவிலகல்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும்பட்சத்தில், அவரது பதவியை வறிதாக்கும் 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை கவனத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு இன்னோர் ஆள் நியமிக்கப்படலாம். அத்தகைய உறுப்பினரின் இடத்தில் அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் எவ்வுறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

6. சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் சுகவீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயன்றவராக விராதவிடத்து, அத்தகைய இயலாமைபற்றி நியமிக்கின்ற அதிகாரசபைக்கு எழுத்தில் அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அதன்மேல் 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு அத்தகைய காலப்பகுதியின்போது அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கென வேறோர் ஆள் நியமிக்கப்படலாம்.

7. சபையின் உறுப்பினர்களுக்கு அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

8. (1) சபையின் தவிசாளர் சமுகமளித்திருப்பின் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் அவர் தலைமைதாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் வராதிருப்பின், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைவகிக்கவெனச் சமூகமளித்துள்ள உறுப்பினர்கள் தம்முள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(3) சபையின் எதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்குகின்ற ஆள் அவரது சொந்த வாக்குடன் மேலதிகமான அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(4) இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய சபை அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையையும் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதனையும் ஒழுங்குபடுத்தலாம்.

9. சபையின் செயல், முடிவு அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக அல்லது அதன் உறுப்பினர் எவரினது நியமனத்தில் ஏதேனும் முறைப்பாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

10. (1) அதிகாரசபையின் இலச்சினையானது சபையினால் தீர்மானிக்கப்பட்டு உருவாக்கப்படலாம் என்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) அதிகாரசபையின் இலச்சினையானது, காலத்திற்குக்காலம் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினையானது சபையின் வலுவளிப்புடனும் மற்றும் சபையின் இரண்டு உறுப்பினர்களிதும் முன்னிலையிலுமன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் அல்லது ஆவணமெதிலும் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன், அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அல்லது ஆவணத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும்.

(4) சபையானது அதன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள சாசனங்களின் மற்றும் ஆவணங்களின் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

11. (1) சபையின் தவிசாளர் சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய இயலாதவராகவிருப்பின், 11 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, அவர் இடத்திற் செயலாற்றவெனச் சபையின் வேறொரு உறுப்பினர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபையின் தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம். அத்தகைய பதவிவிலகலானது அமைச்சரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன் மேல் பயனுறுதல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*